பக்கங்கள்-16 | 09.சித்திரை.2023 | விலை–50.00



தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –410

மதவாத அரசியலின் சூத்திரதாரிகள் யார்?

வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை சிதைக்கும் நோக்கில் அன்றிலிருந்து இன்றுவரை அரச இயந்திரம் செயற்படுகின்றது

பயங்கரவாத தடைச்சட்டம் தொடருமானால் அடக்குமுறையை எதிர்த்து போரிடநேரிடும்

மதவாத அரசியலின் சூத்திரதாரிகள் யார்?

மதம் என்பது ஒரு மனிதன் பௌத்த மதமாக இருந்தாலும் சரி இந்து மதமாக இருந்தாலும் சரி அல்லது பிற மதங்களாக இருந்தாலும் சரி அனைத்து மதங்களினதும் அடிப்படையை பார்த்தால் அன்பின் அடித்தளமாக எழுந்திருக்கின்றது. ஆனால் இவ்வாறு மனித மனங்களில் புரிந்துணர்வை ஏற்படுத்தி அன்பை வெளிப்படுத்தக்கூடிய கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு அதிகார அல்லது ஆக்கிரமிப்புக்கும் பயன்படுத்துவது என்பது அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றது. உதாரணமாக வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் மதம் என சொல்லப்படுகின்ற சைவ மதத்தின் மீதும் பல தாக்குதல்கள் இருக்கின்றன. கிறிஸ்தவமதம் அல்லது ஏனைய மதத்தினை சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்கின்றார்கள் தமிழ் பேசும் மதங்களாக உள்ளவர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்ளுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மையாக இருக்கின்ற பௌத்த மதத்தில் இருந்து வடக்கு கிழக்கில் அச்சுறுத்தல் வருகின்ற பொழுது அதற்கு எதிராக இவர்கள் இணைந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பது வேடிக்கையாக இருக்கின்றது.

உதாரணமாக மன்னாரிலே சைவ சமயத்திற்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்துவிடுகின்ற சிலர் வவுனியாவில் வெடுக்குநாரி மலைக்காக போராடுகின்றார்கள். இந்துக்கள் பெரும்பான்மையினர் கொண்டாடும் சிவராத்திரி தினம் அன்று உலக புகழ் பெற்ற ஆலயமான திருக்கேதீஸ்வரத்திலே சிவராத்திரி தினம் அன்று மக்கள் வழிபட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது பெண்கள் ஆண்கள் அனைவரும் சேர்ந்து போய் கண்ணுக்கு முன் கடவுளை உடைத்து எரிகின்றார்கள். அதற்கு எதிராக குரல் கொடுக்க யாரும் இல்லை அது தொடர்பாக வழக்கு நீதி மன்றத்தில் தொடுத்த பொழுது உடைத்தவர்களை காப்பாற்றுவதற்காக வவுனியாவில் இருந்தும் மன்னாரில் இருந்தும் வந்த சிரேஸ்ட சட்டத்தரணிகள் முல்லைத்தீவில் சைவ ஆலயத்தில் இதுபோன்ற ஒரு பிரச்சனை நடந்த பொழுதும் அதற்கு எதிராக ஆலய நிர்வாகத்துடன் நின்று போராடுகின்றார்கள். இதுவொரு வித்தியாசமான வேடிக்கையாக இருக்கின்றது. நாங்கள் மன்னாரிலே உடைப்போம் உடைப்போரை வெளியில் எடுப்போம் அவர்களை ஆதரிப்போம் ஆனால் மன்னாருக்கு வெளியே நாங்கள் பௌத்தர்களுக்கு எதிராக போராடுவோம் என்பது நூறு வீதம் சந்தர்ப்பவாத அரசியலாக சந்தர்ப்பவாத மதவாதமாகத்தான் இதைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

வன்னியை பொறுத்தவரையில் மத ரீதியான வாக்குகள் தான் தற்பொழுது ஒருங்கிணைக்கப் பட்டிருக்கின்றது. மிக கண்ணியமாக மிக நேர்த்தியாக திட்டமிடப்பட்டு மத ரீதியான வாக்குகள்பெறப்பட்டுஒருமதம்சார்ந்தவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக உருவாகின்ற நிலைமை இங்கு இருக்கின்றது. ஒன்று அந்த மதம் சார்ந்தவர்கள் அல்லது இடையில் மதம் மாறியவர்கள் தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாறிக்கொண்டு வருகின்றார்கள். அல்லது மதத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். இந்த வகையிலே அரசியல்வாதிகளும் மதகுருமார்களும் மதகுருமார் என்னும் பொழுது சைவ சமய மதக்குருக்கள் அரசியலில் நேரடியாக பிரச்சாரங்களில் இறங்காவிட்டாலும் கூட இலங்கையை பொறுத்தவரையில் பௌத்த துறவிகளும் கிறிஸ்தவ பாதிரிகளும் வெளிப்படையாக அரசியல் செய்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. எவ்வாறு பௌத்த துறவிகளாகிய பிக்குகள் அரசியலில் நேரடியாக பங்குபற்றுவது எங்களுக்கு எரிச்சல் ஊட்டுகின்றதோ அதை போல கிறிஸ்தவ பாதிரிகள் அந்த அங்கிகளோடு அரசியல் போராட்டங்களில் கலந்து கொள்வதும் அரசியல் கருத்துக்களை தெரிவிப்பதுமாக இருக்கின்றார்கள். எனவே இவர்கள் அரசியல் செய்வது என்பது ஆரோக்கியமான அரசியலாக இருக்காது. அரசியல் என்பது அரசியல்வாதிகளுக்கு உரியது மதத்தலைவர்களுக்குரியது அல்ல. இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்ற பொழுது அல்லது மக்களுக்குள் முரண்பாடு ஏற்படுகின்ற பொழுது மதத்தலைவர்கள் ஒன்றிணைந்து தான் அதை சமரசம் செய்ய வேண்டும். உண்மையிலே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் தற்பொழுது ஒரு பிரச்சனை வருகின்றது என்றால் பிக்குகளும் பாதிரிகளும் குருக்களும் ஒன்றிணைந்து பேசி சமாதான முறையில் பேச்சுவார்த்தையை நடத்தி மக்களை ஒன்றிணைக்கின்ற காரியத்தை தான் மதத்தலைவர்கள் செய்ய வேண்டும். ஆனால் இங்கு மதத்தலைவர்கள் பிரித்தாளும் செயலை தான் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஒரு நடுநிலையான மதத்தலைவர்களாக இல்லை அவரவர் சார்ந்து போராடிக்கொண்டிருக்கின்றார்கள். கிறிஸ்தவ மதத்தினை பார்த்தால் பெரிய வேடிக்கை என்னவென்றால் சிங்கள கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள் தமிழ் கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள். சிங்கள சிறிஸ்தவ பாதிரிகள் சிங்கள தேசியம் பேசுகின்றார்கள் தமிழ் கிறிஸ்தவ பாதிரிகள் தமிழ் தேசியம் பேசுகின்றார்கள். ஒரே மதத்திற்குள் இரண்டு மொழி பேசுகின்றவர்கள் இருந்துகொண்டு சிங்கள தேசியவாதம் பேசுகின்றார்கள் நீர்கொழும்பு தெற்குபக்கத்தில் உள்ள பாதிரிகள். மன்னார் போன்ற வடக்கில் இருக்கும் பாதிரிகள் தமிழ் தேசியம் பேசுகின்றார்கள். சிங்கள மக்களுக்கு எதிராக அல்லது சிங்கள அரசாங்கத்திற்கு எதிராக இவர்கள் குரல் கொடுக்கின்றார்கள் அவர்கள் தமிழ் தேசிய அரசியலுக்கு எதிராக பேசுவதையும் பார்க்க முடிகின்றது. இவை அனைத்தும் முற்றிலும் முரண்பாடானது. மதங்களுக்கு அடிப்படை கோட்பாட்டிற்கே சவால் கொடுக்கும் செயலாகத் தான் இலங்கையை பொறுத்தவரையில் மதவாதம் என்பது இருக்கின்றது.

அரசியலுக்குள் மதம் வரக்கூடாது என்று அரசியலுக்குள் மதம் வந்ததோ அன்று தான் இலங்கை பின்னடையத் தொடங்கியது. உதாரணமாக முதன்முதலிலே அரசியலிற்குள் மதத்தினை புகுத்தியவர்கள் பெரும்பான்மையினத்தவர்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை அனைத்து ஒப்பந்தங்களிற்கு பின்னாலும் குழப்புவதற்கான பிரதான சூத்திரதாரியாக பௌத்த பிக்குகள் இருந்தார்கள் என்பது வரலாறு. அதே போன்று ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக வந்ததன் பின்னரும் கூட நாடு தீர்வு பெறவேண்டும் 13 ஆம் திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பேச்சுக்கள் எடுக்கின்ற பொழுது கூட உடனடியாக ஏற்கனவே தெற்கில் தீவிரமாக மதம் தீர்மானிக்கின்ற சக்திகளாக அரசியலுக்குள் மாறியிருக்கின்றார்கள். அது இந்த நாட்டிற்கு ஒரு சாபக்கேடு. அதே போன்று எமது மதத்தலைவர்களும் தீவிரமான தமிழ் தேசியவாதிகளாக இருக்கின்றது. தமிழ் சிங்கள மதத்தலைவர்கள் தங்களை மேன்மையாளர்களாக வைத்துக்கொண்டால் மட்டுமே நாட்டில் ஒரு சமாதானம் சகோதரத்துவங்கள் வளர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இவ்வாறு இருக்கும் பொழுது சாதாரணமாகவே சமூகம் வளர்ச்சியடையும் மதவாதம் இனவாதம் இருக்கின்ற எந்தவொரு நாடும் முன்னேறியதாக சரித்திரமே இல்லை.

பிற நாடுகளில் இருந்து வந்து இலங்கையிலே மத பிரச்சாரங்களில் ஈடுபட்டு மத மாற்றங்களில் ஈடுபடுகின்றார்கள் என அண்மையிலே சிவசேனை அமைப்பு மற்றும் ஏனைய அமைப்புக்கள் வடக்கிலும் கிழக்கிலும் துண்டு பிரசுரங்களையும் வெளியிட்டு அதற்கான தடயம் எடுத்ததன் அடுத்த பக்க விளைவு தான் வெடுக்குநாரியினுடைய லிங்கத்தை தூக்கி எறிந்தார்கள் அல்லது அடியாட்களை வைத்து கிறிஸ்தவ சமூதாயம் செய்தது என்றவொரு குற்றச்சாட்டு நிலவுகின்றது.என சொல்லப்படுகின்றது. ஆனால் அதை நாங்கள் குற்றம் சாட்டமுடியாது. குறிப்பாக ஒரு பிரச்சனை கண்ணுக்குத் தெரியாத சந்தேக நபர்கள் வந்து தாக்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால் நாங்கள் அந்த சந்தேகத்தை பொதுவாக எழுப்ப வேண்டும். அது யாராகவேனும் இருக்கலாம் எந்த மதத்தை சார்ந்தவராகவும் இருக்கலாம் ஆனால் வெடுக்குநாரி தொடர்பான பிரச்சனையில் போராட்டங்களை வழிநடத்துகின்ற சில அரசியல் கட்சிகளின் பின்னணியை கொண்டவர்கள் தவறாக இதை பௌத்தர்களின் ஆக்கிரமிப்பில் தான் இது நடந்திருக்கின்றது எனக் கூறி ஒருவரை அடையாளம் காட்டி குற்றம் சாட்டுவதனால் உண்மையான குற்றவாளிகள் இதை சாட்டாக கொண்டு தப்பி விடுகின்றார்கள். நாங்கள் ஒரு குற்றம் நடந்தால் அது தொடர்பான தெளிவான விளக்கம் இல்லையென்றால் அல்லது யார் செய்தார்கள் என்பது தொடர்பான தெளிவான பார்வை இருந்தால் அந்த சந்தேகத்தை நாங்கள் பொதுவாக எழுப்ப வேண்டும் அது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற கோணத்தில் தான் ஆராய வேண்டுமே தவிர நாங்கள் ஒருவரை குறிப்பிட்டு இவர் தான் செய்திருப்பார் என்ற சந்தேகத்தினை ஏற்படுத்தும் பொழுது அவர்களை சுற்றி விசாரணைகள் நடத்தப்படுகின்ற பொழுது வெளியில் உள்ளவர்கள் உண்மையில் அதை செய்தவர்கள் கூட அதிலிருந்து தப்பித்துவிடுவதற்கான வாய்ப்பிருக்கின்றது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் கூட வெடுக்குநாரி மலை தொடர்பான போராட்டத்தில் கூட தலையிடலாம். அவர்களுக்கு தெரியும் நாங்கள் எதை செய்தாலும் இவர்கள் பௌத்த பேரினவாதம் தான் இதை செய்தது என மாற்றிவிடுவார்கள் என்பது தெரியும். ஒரு காலத்திலே இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலே யாரை யார் சுட்டாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் சுட்டார்கள் எனக்கூறி பைலை குலோஸ் செய்துவிட்டு போனது போன்று தற்பொழுது யார் சிலையை உடைத்தாலும் அது பௌத்தர்கள் என்று கூறப்படுகின்றது. மன்னாரில் உடைத்தால் அது வித்தியாசமாக பார்க்கப்படுகின்றது. முல்லைத்தீவு வவுனியாவில் சிலையை உடைத்தால் பௌத்தர்கள் தான் உடைத்தார்கள் என சொல்லப்படுகின்றது. அதை யாரும் உடைக்கலாம் பௌத்தர்கள் உடைக்கவில்லை என்று சொல்லவில்லை. பௌத்தர்கள் தான் உடைத்தார்கள் என்ற முடிவிற்கு நாங்கள் வருவதாக இருந்தால் உண்மையிலே வேறு மதத்தவர்கள் வேறு எதிரிகள் உடைத்திருந்தால் கூட அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது.



தொடரும்...
ஆதித்திரன்



தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

மதத்தை முன்னிறுத்தி நாட்டைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளில் பௌத்த துறவிகள்

இந்த நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்களவர்கள். ஒட்டுமொத்த இலங்கைத்தீவும் தமக்கே உரியது என்றும். தமது மதமாகிய பௌத்தம் தான் இந்த நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் வேரூன்ற வேண்டும் என்கிற குறிக்கோளுடன். நாடு முழுவதும் பௌத்த விகாரைகளை அமைக்கும் துரித வேலைத்திட்டத்தில் களமிறங்கியுள்ளனர். பௌத்த சிந்தனைகள். நிகழ்ச்சிநிரல்கள் தான் அரசாங்கத்தை வழிநடத்துகின்றன. அரசியலமைப்பினை மீறி இந்த நாட்டிலுள்ள பௌத்த பீடங்கள் தான் எல்லாவற்றையும் செயற்படுத்துகின்றன. மீறிச் செயற்படுகிறவர்களைக் கட்டுப்படுத்தவும் செய்கின்றன.

ஆரம்பத்தில் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த தமிழ் மக்கள் இன்று வடக்கு மற்றும் கிழக்கினை தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர். இன்றும் தமிழ் மன்னர்கள் கட்டிய ஆலயங்கள் இலங்கை முழுவதும் விரிந்து கிடக்கின்றன. கவனிப்பாரற்று சேதமடைந்து காணப்படுகின்றன. கடந்த 30 வருடாங்களுக்கு மேலாக ஆயுத ரீதியாக பலம் பெற்று வாழ்ந்த தமிழினத்தை அழித்தொழிக்க திட்டம் தீட்டிச் செயற்பட்டதும் இந்த பௌத்த நிகழ்ச்சிநிரல் தான்.

இன்று தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டு அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்கள் தொடர்கையில். பௌத்த துறவிகளின் குழுவொன்று தெற்கிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கிற்குள் ஊடுருவல் செய்து. தமிழர் வாழ் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்தி விகாரைகளைக் கட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு துணையாக தொல்லியல் திணைக்களமும். பொலிசாரும் இருக்கின்றனர்.

ஏற்கனவே பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வளர்ப்பதில் தொடர்ந்தும் தவறு செய்து வருகிறது. இதனால் உள்நாட்டில் இனங்களுக்கிடையிலான மோதல் போக்கு அதிகரித்து வருகிறது. தமிழர் வாழ் பிரதேசங்களில் நீதிமன்றத்தின் கட்டளைகளை மீறி. பௌத்த துறவிகளின் அடாவடிச் செயற்பாடுகள் தொடர்கின்றன. அண்மையில் வெடுக்குநாறி மலையில் சைவ மக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபட்டுவந்த சிவபெருமானின் விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்ட சம்பவம் நடைபெற்றது. குருந்தூர் மலையில் பௌத்த பிக்குகளின் உதவியுடன். தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையில். பொலிசாரின் பாதுகாப்பில் விகாரையொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் கட்டுமானங்களுக்கு தடை உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் இந்த நாட்டின் சட்டம் பௌத்த துறவிகளால் மீறப்பட்டுள்ளது. புல்மோட்டையில் நடந்த மோதல் சம்பவம். கச்சதீவில் திடீரென வைக்கப்பட்ட பௌத்த விகாரை என இந்நாட்டில் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் இந்த பௌத்த துறவிகள் நாடு முழுவதும் களமிறக்கப்பட்டு வலம் வருகின்றனர்.

இவர்கள் தான் இந்த நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தனர். பௌத்த மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடே இந்த நாட்டின் யுத்தத்திற்குக் காரணமானது. தமிழினம் இன்றும் வீதிகளில் இறங்கி தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். உயிர் அச்சுறுத்தலால் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்தனர். இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் இந்த பௌத்த சிந்தனைதான். பாராளுமன்றில் தமிழினத்தின் பிரதிநிதிகள் என்னதான் கதைத்தாலும் பௌத்த நிகழ்ச்சிநிரலில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

பௌத்த துறவிகளின் அடாவடிச் செயற்பாடுகள் நிறுத்தப்படவில்லை. இன்று தமிழினமாகிய நாம் எதனையும் இந்த நாட்டில் எமக்காக செய்ய முடியாத கையறுநிலையில் இருக்கிறோம். நீதிமன்றத்தை அவமதிப்பு செய்த பௌத்த தேரருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ததும் இந்த நாடு தான் என்பதை நாம் நினைவிற்கொண்டு. கருத்து மோதல்களால். துரோகத்தனத்தால். கொள்கைகளால். உட்கட்சி மோதல்களால். சுயநலத்தால். பதவி மோகத்தால். இதர பல சலுகைகளுக்காக என பற்பல கட்சிகளை உருவாக்கிக்கொண்டு பிரிந்துகிடக்கும் தமிழினம் ஒற்றுமைப்பட்டாலே எதுவும் சாத்தியமாகும்.

கல்லறைப் பூக்கள்

பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

திருவிழா தொடங்கி விட்டால் வயல் வெளிகளில் சிறுவர்கள் வருவதும் போவதுமாக இருப்பார்கள் இதைக் கண்ட சிட்டுக்குருவிகள் கூட்டம் கூட்டமாக 'கீச்... கீச்...' - பறந்து செல்லும் காட்சி என்ன காட்சி...? - இந்த கிராமத்தின் இயற்கைக் காட்சிகளைக் கூட்டிக்கொண்டே போகலாம். இந்த ஊரில் வாழ்ந்தவர்கள் செல்லத்துரை, இராசலட்சுமி அவர்களின் பிள்ளைகள் ராம், அலெக்ஸ், நிரோஜா ஆகியோரைக் கொண்ட இந்த குடும்பம்.

இராசலட்சுமி சாப்பாடு கட்டிட்டியா?
ஆமாங்க அப்பா...
சரி புள்ள நிரோஜாக்குட்டி அந்த சாப்பாட எடுத்துக்கிட்டு வா
இண்டைக்கு மொதலாளி வேளைக்கு வர சொன்னர்
செல்லத்துரை ஏதோ தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தச்சன் வேலை செய்து வந்தான். தினமும் அதிகாலை சாப்பாடு கட்டிக்கொண்டுபோய் மாலையே வீடு திரும்புவான்.
செல்லத்துரையின் குறிக்கோள் தனது உடம்பில் உயிர் இருக்கும் வரை தனது மனைவியையும் பிள்ளைகளையும் வேலைக்கு அனுப்பக்கூடாது என்பது. அது எவ்வளவு காலம் சாத்தியமாகும்.
1989 ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கையில் இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தது. அன்றும் வழமைபோலவே
இராசலட்சுமி சாப்பாடு கட்டிட்டியா?
ஆமாங்க அப்பா...
சரி எடுத்துக்கிட்டு வா...
இண்டைக்கு மொதலாளி வூட்டுக்கு கதவுக்கு பூவேல செய்யனும். அதோட தீபாவளியும் வருது இன்னும் பத்து நாள் இருக்கு கடை ஒட்டிசுட்டானில் இருக்குது கடைக்கு ஏதோ ஜன்னல் போட வேணுமென சொன்னாரு.
நா எப்படியும் தீபாவளிக்கு ரெண்டு நாளுக்கு முன்னாடியே வந்துடுவன்.
நா வர பிந்தினா...? பக்கத்து வூட்டு மணியண்ணை வருவாறு. அவருக்கிட்ட காசு கொடுத்து விடுகிற. நீ கடைக்குப் போய் புள்ளைகளுக்கும் ஒனக்கும் உடுப்பு எடு. ஒட்டிசுட்டானுக்கு போன நா கடையில சாப்புடுற... என கூறிவிட்டு அவசரம் அவசரமாக ஓடினான் செல்லத்துரை.
சினிமாவில் வரும்

11

கதாபாத்திரங்களைப்போல திடீரென்று உழைத்து முன்னுக்குவர முடியுமா? யதார்த்த வாழ்வில் படிப்படியாகத்தான் உழைக்க வேண்டும். இதை நன்கு அறிந்தவன் போல செல்லத்துரை.
செல்லத்துரை கூறிச் சென்றதைப் போல தீபாவளியும் நெருங்கிக் கொண்டே வந்தது.
"தங்கச்சி இராசலட்சுமி... இராசலட்சுமி.."
"இந்தா புள்ள செல்லத்துரைத் தம்பி காசு குடுத்துவிட்டாரு"
"அவர் வரேலையா?"
"நாளைக்கு நாளேண்டைய்களவுல வராராம்..."
இதைக் கேட்டதும் இராசலட்சுமி ஆனந்தக் கடலில் மூழ்கிவிட்டாள்.
அடுத்தநாள் அதிகாலை தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு புடவைக்கடைக்குச் சென்று, தனது மூன்று பிள்ளைகளுக்கும் உடையை எடுத்துக்கொண்டு தனக்கும் ஒரு சாரியை எடுத்ததுடன், தனது கணவனுக்கும் ஒரு சாரத்தையும் சேட்டையும் வாங்கிக் கொண்டாள்.
தீபாவளிக்கு ஒரு நாளே இருந்தது. அந்த ஊரே விழாக்கோலமாகக் காட்சியளித்தது. பல இடங்களில் இருந்து புதிய புதிய ஆட்கள் அங்கு வந்து குவிந்தனர். இதையெல்லாம் பார்க்கும்போது இராசலட்சமிக்கு தன்னையறியாத ஒரு கொண்டாட்டம். அவள் வீட்டை மெழுகி பாத்திரங்கள் தளபாடங்கள் பாய்கள் எல்லாவற்றையும் கழுவி, தனது தந்தையாரின் படத்துக்கு பூ வைத்தாள். இவளின் தகப்பனார் ஒரு காவலாளியாக சங்கத்தில் கடமை புரிந்தவர். இரவுப்பொழுது இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொகல்லப்பட்டார். பின்னர் இவர் கடமையில் இருக்கும்போது சுட்டுக்கொல்லப்பட்டதனால், ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் நாற்பதாயிரம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டது. இந்த பணம் இவளின் தகப்பனுக்கு ஈடாகுமா? இவள் தினம் தினம் படும் துயரம் அரசாங்கத்துக்குத் தெரியுமா? தீபாவளிக்குச் சுட்ட பலகாரங்களை பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கொடுப்பதற்காக பைகளில் போட்டு அடைத்துவிட்டு, வீட்டை அலங்காரம் செய்ததுடன், தாங்கள் செல்லமாக வளர்த்த ஆட்களையும் அலங்காரம் செய்து விட்டு இராசலம்சுமியும் பிள்ளைகளும் நாளை மலரப்போகும் தீபாவளியை எதிர்பார்த்த வண்ணம் படுக்கைக்குச் சென்றனர். நித்திரை எப்படி வரும் நாளை தீபாவளியல்லவா?

செல்லத்துரை அவசரம் அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு கடைத்தெருவுக்கு சென்று தீன்பண்டங்களை வேண்டிக் கொண்டு "மொதலாளி நா போய்ட்டுவாரன்..." சரி பாத்துப் போ றோட்டு றோட்டா ஒரே ஆமிக்காரநிக்கிறாங்கள்."
எங்கேயோ ஒரு ஆமியைச் சுட்டதற்கு இராணுவம் சுற்றிவளைப்பு செய்தது. காட்டுக்குள் ஏதோ சருகுச் சத்தம் கேட்டதும் சரமாரியாக சுட ஆரம்பித்தான். சைக்கிளில் வந்த செல்லத்துரையை துப்பாக்கிக் குண்டுகள் பதம் பார்க்கின்றன. பல எதிர்காலக் கனவுகளுடன் அம்மா... அம்மா... என்று கத்தியது தான் தெரியும் அவன் உயிர் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்துவிட்டது. செல்லத்துரை சினிமாவில் வரும் கதாநாயகனா? துப்பாக்கிக் குண்டை ஏந்துவதற்கு.
அதிகாலைப் பொழுது விடிகின்றது. ஊரெங்கும் பாட்டுச்சத்தமும் பட்டாசுச் சத்தமும் கேட்டன. பிள்ளைகள் புதுச்சட்டைகளை அணிந்து கொண்டு கோயிலுக்குப் போக ஆயத்தமாகினர்.. இராசலட்சுமி குளித்துப் புதுச்சேலையை அணிந்து கொண்டு, புள்ளங்களே நில்லுங்கடா இப்ப அப்பா வந்திடுவாரு. அவரையும் கூட்டிக்கிட்டு போவலாம்.
செல்லத்துரை இறந்த விடயம் முதலாளிக்கு தெரிய வந்ததும் அவர் அங்கு சென்று பிணத்த எடுத்துக்கொண்டு வந்தார்.
முதலாளியின் கார் வாசலில் வருகிறது. ஏய்பள்ளங்களா அப்பா வந்திட்டாரு போல வெளிப்படலையில சத்தம் கேக்குது போய் பாருங்கடா.
பின்னே ஒரு வானில் செல்லத்துரை எதுவும் அறியாதவன் போல அமைதியாக தூங்கிக்கொண்டு வருவதினைப் போல வந்தான்..
ஓ,ஒமொதலாளியும் அப்பாவும் அவரோடு வேல பாக்குரவங்களும் தீபாவளிக்கு வூட்டுக்கு வந்திருக்காங்க பாயவிரித்துப் போடுங்கடா... என்று தனது பிள்ளைகளிடம் கூறிவிட்டு படலை அடிக்கு ஓடி வந்தாள்.

சவப்பெட்டி இறக்கப்பட்டது. இதைக்கண்ட இராசலட்சுமி விளாறு போன்று நிலத்தில விழுகின்றாள். பிள்ளைகள் அப்பா அப்பா... என்று கத்தி கத்தி மயங்கும் நிலைக்குச் சென்றுவிட்டனர். ஐயொ! உங்கள இந்த நிலையில் பார்க்கவா புது சாரமும் சேட்டும் வாங்கினம் என்று உருண்டு உருண்டு பலவாறு புலம்பினாள், இராசலட்சுமி. தீபாவளியை எதிர்பார்த்த இவர்களுக்கு வாழ்க்கையில் இதுவோ? தீபாவளி விருந்தாளிகளை எதிர்பார்த்து ஓடிய இவர்களுக்கு. இவர்களோ? விருந்தாளிகள் அணிந்த புதிய ஆடைகள் களி மண்ணில் உருண்டு உருண்டு இரத்த கலராக காட்சியளித்தது. முதலாளியும் அவருடன் வந்தவர்களும் ஆறுதல் கூறினார்கள். இவர்களுக்கு இனி யார்? ஆறுதல் கூறியும் என்ன பயன் போன உயிர் திரும்பி வருமா? இராசலட்சுமியின் தகப்பனின் படம் தனியாக இருந்த வீட்டில் செல்லத்துரையின் படமும் மாட்டுப்பட்டுவிட்டது.
செல்லத்துரை இறந்த பின்னர் கூலிவேலை செய்து மூன்று பிள்ளைகளையும் வளர்த்து விட்டாள் இராசலட்சுமி. ராம் **A/L** படித்து வீட்டில் விவசாயம் செய்வதுடன் நிரந்தர தொழிலையும் தேடினான். அலெக்ஸ் **O/L** படித்துக் கொண்டிருந்தான். நிரோஜா ஆண்டு பத்து படித்தாள் இப்போது எல்லா இராசலட்சுமி வேலைக்குப் போவதில்லை. ராமின் விவசாய செய்கையிலேயே வீட்டின் செலவு ஒடியது.

தொடரும்...

வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை சிதைக்கும் நோக்கில் அன்றிலிருந்து இன்று வரை அரச இயந்திரம் செயற்படுகின்றது

வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை சிதைக்கும் நோக்கில் அரச பயங்கரவாதம் செயற்படுகின்றது. இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஆட்சியாளர்கள் தமக்குள் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. 1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 இல் வரலாறு காணாத எழுச்சியாக மக்கள் போராட்டம் வெடித்திருந்தது. அதுவே இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் பாரிய கர்த்தால் போராட்டமாகும். அக்காலகட்டத்தில் டட்லி சேனநாயக்க பிரதமராக அமைச்சுப் பதவி வகித்ததோடு நிதி அமைச்சராக ஜே.ஆர். ஜெவர்தன இருந்தார். அக்காலத்தில் அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தை இன ரீதியாக பிரித்து தோட்டத்தொழிலாளர்களின் குடியுரிமையை இரத்து செய்து மக்களின் பாதை இழிவான நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. 1953 யூலை 23 அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைக்கு எதிராக வெகுஜன எதிர்ப்பு நிலை உருவாகியது. தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறங்களில் கணிசமான ஆதரவினை பெற்ற லங்கா சமசமாஜக் கட்சி (**LSSP**) ஆகஸ்ட் 12 அன்று ஒரு போராட்டத்தை அறிவித்தது. அந்த போராட்டத்தின் காரணமாக பல இடங்களில் வியாபாரங்கள் முடக்கப்பட்டது. வன்முறை சம்பவங்கள் ஆங்காங்கே உருவெடுத்தன. இதில் 9 தொழிலாளர்களை இலங்கை அரசாங்கம் சுட்டுக்கொன்றது 175 பேர் காயமடைந்தனர். இதன் காரணமாக 1953 ஒக்டோபர் 12 ஆம் திகதி அவர் இராஜினாமா செய்துகொண்டார். புதிய பிரதமராக சேர் ஜோன் கொத்தலாவல பதவியேற்றார். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி தொடர்ந்தாலும் 1956 இல் தேர்தலில் அக் கட்சி படுதோல்வியை சந்தித்தது.

அந்த வகையில் தான் தற்பொழுதும் ஆட்சியில் உள்ள ராஜபக்சவிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் போராட்டங்கள் அனைத்தும் உலக நாடுகள் உற்று நோக்கும் முகமாக அமைகின்றது. ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று கிளர்ச்சியாளர்கள் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக கிளர்ந்து எழுந்ததே இந்த அறகள போராட்டம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீண்ட காலமாக முஸ்லிம் கட்சிகளை இணைத்து வைத்துக்கொண்டிருந்தது. அவர்களை என்று இந்த அரசாங்கம் களைகட்ட எண்ணியதோ அன்றிலிருந்து இலங்கை அரசு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்தது. முஸ்லிம்களை அரச தரப்பில் இருந்து ஓரங்கட்டுவதற்கு அரசாங்கம் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையிலே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இம் மாதம் இந்த நாட்டில் இடம்பெற்றமையை நினைவுபடுத்துகின்றது. இதில் 3 கிறிஸ்தவ கோவில்களும், 5 நட்சத்திர உணவு விடுதிகளும், 3 பைஸ்டார் ஹோட்டல்களும் இலக்காகின. 39 வெளிநாட்டவர்களும், 3 காவல் துறையினரும் உட்பட 253 பேர் கொலை செய்யப்பட்டனர். 500 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அப்பொழுது நல்லாட்சி அரசாங்கம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. நல்லாட்சி அரசாங்கமே இவ் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு காரணமாக இருந்தது என அரச பயங்கரவாதம் முத்திரையிட்டு மைத்திரி நல்லாட்சி அரசாங்கத்தை ஓட ஓட விரட்டியது. மைத்திரி அரசாங்கமும் தமிழினத்தை காப்பாற்றும் என எண்ணியிருந்த பொழுது அதுவும் கைகூடாமல் போனது. டட்லி சேனநாயக்காவில் இருந்து ரணில் விக்ரமசிங்க வரையிலான ஆட்சியாளர்களுள் அனைவருமே இனவாத போக்கை கொண்டுள்ளார்கள் என்பது திட்டவட்டமான உண்மை. சட்டம் தன் கடமையை செய்யும் என்று கூறினாலும் இலங்கையில் நீதிச் சட்டம் என்பது குழிதோண்டி புதைக்கப்பட்டதொன்று. குறிப்பாக காணி பொலிஸ் அதிகாரங்கள் என்பனவற்றில் சுரண்டல்கள் ஏற்படுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறுதரப்பட்ட போராட்டங்கள் இடம்பெற்றாலும் அதனை அரசாங்கம் கண்டுகொள்வதில்லை. சிங்கள இனவாத அரசியலை தூண்டும் வகையில் அல்லது அவர்களுக்கு எதிராக ஒரு போரை தொடுக்கும் வகையிலும் மக்களை அரசாங்கம் எப்பொழுதும் தீண்டிக்கொண்டே இருக்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுமா? இல்லையா? என்ற கேள்விக்கு இதுவரை எந்த பதிலும் இல்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுலாக்கிக்கொண்டுள்ள அரசாங்கம் தான் நினைத்தவாறு செயல்திட்டங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றது. ஈழ விடுதலைப் போராட்டம் என்பது பல்வேறு பரிணாமங்களை கொண்டிருந்தது ஒன்று. ஒரு நாட்டில் நீதி நிலை நிறுத்தப்பட்டால் மட்டுமே அந்த சமூகம் காப்பாற்றப்படும். இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இனப்படுகொலை என்பதனை மூடிமறைக்கும் அரசாங்கத்திடம் நீதி கேட்பது எப்படி. இலங்கையில் வாழும் வரலாறு மிகக்கொடிய இனப்படுகொலையில் நூற்றாண்டு காலமாக இருந்து கொண்டிருக்கின்றது. இலங்கைத்தீவின் வாழ்வும் வரலாறும் மிகக் கொடிய இனப்பகைமையில் நூற்றாண்டுக் காலமாய் எரிந்துகொண்டிருக்கிறது. இந்தத் தீயின் கோரத்தில் சாம்பலாக்கப்பட்ட உயிர்கள் லட்சக்கணக்கானவை. "இந்து சமுத்திரத்தின் முத்து" என்று அழைக்கப்பட்ட இலங்கைத்தீவு இந்த இனப்பகைமையின் காரணமாக ஒரு ரத்த சமுத்திரத்தையே தனக்குள் உருவாக்கிக் கொண்டது. சிங்களப் பெரும்பான்மைவாதமும் தேரவாத பௌத்தவாதச் சிந்தனையும் இந்தத் தீவில் அந்த ரத்த சமுத்திரத்தை உருவாக்கின. எந்தவொரு நிமிடத்தின் ஏதோவொரு விநாடியிலும் தமிழர் ஒருவரின் ரத்தத்தை வாளேந்திய சிங்கம் பருகியபடியிருக்கும் பேரினவாதக் குரூரமே இலங்கை அரசியல் வரலாறு.

பிரித்தானியம் பற்றவைத்த நெருப்பு!

இலங்கை எப்போதும் இந்தியாவுடன் சேர்ந்துவிடக்கூடாது என்பதில் கவனமாயிருந்த பிரித்தானியர்கள். இந்தியாவுக்கான காலனிய அரசியல் கட்டமைப்புகளிலிருந்து அனைத்திலும் வேறுபட்டதையே இலங்கையில் நடைமுறைப்படுத்தினர். இவ்வாறான தொரு பின்னணியில் தமிழ்த்தலைவரான சேர்.பொன் அருணாசலம் "இலங்கை இந்தியாவின் ஒரு மாகாணமாக எதிர்காலத்தில் அமைவது நல்லது" என்று கூறினார். உடனே பிரித்தானிய அரசாங்கம் விழிப்படைந்து அப்படி நேர்ந்துவிடக் கூடாது என்று தமது நகர்வுகளை கைக்கொண்டது. பிரித்தானியத் தந்திரமே வெற்றிகொண்டது.

இலங்கை இனப்பகைமையின் அத்தியாயங்கள்!

இந்தியச் சார்பு நிலைகொண்ட ஈழத் தமிழர்களின் போக்கு ஆங்கிலேயர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. தமது புவிசார் அரசியல் நலன்களுக்கு ஏற்பட்ட ஆபத்தாக அதைக்கருதி சிங்களப் பெரும்பான்மை இனத்தை தனது நேசசக்தியாக வளர்த்தெடுத்தது பிரித்தானியம். இயல்பிலேயே இந்திய - தமிழர் வெறுப்புவாதத்தில் வேரோடி நின்றிருந்த சிங்களப் பெரும்பான்மை வாதம் அதைப் பயன்படுத்திக் கொண்டது. இதனால் பிரித்தானியரால் கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருத்தம் (பிரிட்டிஷ் இலங்கையில் டொனமூர் ஆணைக்குழு மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டம்) நேரடியாக இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் எதிரானதாகவே அமைந்திருந்தது. இதைப் புரிந்துகொள்ளவல்ல தலைமைகளை அப்போது மட்டுமல்ல... இப்போதும் ஈழத்தமிழ் அரசியல் பெறவில்லை. பிரித்தானியா கொண்டு வந்த அரசியல் சீர்திருத்தத்தை தமிழ்த்தலைவர்கள் பகிஸ்கரிக்கக் கூடாது என்று சிங்களத் தலைவர்கள் வற்புறுத்தியதற்கு அது பெரும்பான்மை இனத்துக்குச் சார்பாகவும் இந்தியர்களுக்கும் தமிழர்களுக்கும் எதிரானதாகவும் இருந்ததே காரணம். பெரும்பான்மையின் எதேச்சதிகாரம் அங்கு தோன்றியது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் கொண்டிருந்த நெருக்கமும் சார்பும் இலங்கையின் பெரும்பான்மைவாத அரசியல் வளர்ச்சிக்குப் பெரிதும் வித்திட்டது. டி.எஸ்.சேனநாயக்கவின் அரசுக்கும் பிரித்தானியாவிற்கும் இடையே நிகழ்ந்த இரண்டு ஒப்பந்தங்களும் மிக முக்கியமானவை. திருகோணமலைப் பகுதியில் கடற்படைத்தளமும் கட்டு நாயக்காவில் விமானப்படைத்தளமும் அமைப்பதன் வாயிலாக இலங்கையின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தைப் பிரித்தானியா வழங்கியது. இலங்கைத்தீவில் இன்றும் அணையாத இனப்பகைமைத் தீயைப் பற்றவைத்தது பிரித்தானியாவே. அதை நெய்யூற்றி வளர்த்தனர் சிங்கள ஆட்சியாளர்கள்.

துரோகம் தொடங்கிய காலகட்டம்!

சுதந்திரமடைந்த இலங்கையை ஒன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்து. எஸ்.டபுள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்கத் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி கண்டது. இந்தக் காலத்தில் இலங்கையின் இனவாதப் போக்கு இன்னும் அதிகமாக வளர்ந்து நின்றது. எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் முக்கியத் தலைமைக் கட்சியாகத் தன்னைப் பெருமளவில் திடப்படுத்திக்கொண்டது. 1970-க்குப் பிறகு இலங்கையின் இனரீதியான ஒடுக்கு முறையும் வன்முறைகளும் மெல்ல மெல்ல வளர்ந்து தனது கொடுமையான கிளைகளை விரிக்கத் தொடங்கிய காலகட்டமானது.

இலங்கை இனப்பகைமை

சிறிமாவோ பண்டார நாயக்கத் தலைமையிலான ஐக்கிய முன்னணிப் பதவியிலிருந்த நாள்கள் அவை. வாளேந்திய சிங்கம் ரத்தம் பருக தனது பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு இலங்கைத் தீவின் தமிழ் திசை நோக்கி ஓடி வந்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் முதலாவது குடியரசு சாசனத்தில் நிராகரிக்கப்பட்டன. அதுவே மாபெரும் ஊழிப்பிரளயத்தின் ஆதியாய் கனலத் தொடங்கியது. தமிழருக்குக் கல்வியில் பாகுபாடு வேலையின்மை என மெதுவாக அந்தத்தீவு நிறம் மாறியது. தமிழர் என்றால் ஒதுக்கு என்ற பாரபட்சம் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தமிழ்க் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சமஸ்டிக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இணைந்து தமிழர் கூட்டணி தோன்றியது. இது புதிய உத்வேகத்தையும் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிரான அரசியலை முன்னெடுக்கவல்ல துணிச்சலையும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாக்கியது. விடுமா இனவாதம்? அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டார்கள். இரண்டு தமிழர்கள் பேசினாலே காவலர்களால் தாக்கப்படுமளவிற்கு அரசின் வன்முறைக்கருவி தீவிரம் பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதியில் பொலீசாரால் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்ட வன்முறையால் அப்பாவிப் பொது மக்கள் ஒன்பது பேர் கொல்லப்பட்டதே இதன் உச்சம். இலங்கை இனப்பகைமைச் சிக்கலில் முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனை நிகழ்வாக இது அமைந்தது. அதுவரை காந்திய வழியில் போராடிக் கொண்டிருந்த ஈழத்தமிழர்கள் தமது அரசியல்தீர்வையும் போராட்ட வழிமுறையையும் மாற்றிக்கொள்ளும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்.

இனப்பிரச்னைக்கான தீர்வு சமஸ்டி என்று சொல்லிக்கொண்டிருந்த தமிழ் அரசியலாளர்கள். அதன் பிறகே தீர்வு சமஸ்டி அல்ல... தனியரசு என்பதைச் சூளுரையாகப் பிரகடனப்படுத்தினர். சாத்விகப் போராட்ட முறையிலிருந்த தமிழ் அரசியல் ஆயுதத்தைத் தழுவிக் கொண்டது. தமிழீழ விடுதலைப் போராளிகள் ஆயுதம் ஏந்தி உரிமைக் காகப் போராடும் நிர்பந்தத்தைச் சிங்கள இனவாதம் ஏற்படுத்தியது.

இலங்கை இனப்பகைமை

1976-ம் ஆண்டில் தமிழீழக் கோரிக்கை எழுந்தவுடன் இலங்கையின் அரசியல் களம் தீவிர மாற்றம் கண்டது. சிறிமாவோ பண்டார நாயக்கக் காலத்திலும் அதற்கு முன்பும் நிகழ்ந்த பல்வேறு அடக்குமுறைகளின் ஒட்டுமொத்தக் கொதிப்பின் காரணமாக ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்படுபவர்களின் வன்முறை அரசியல் எரிமலையாய் வெடித்தது. அப்போது இந்தியாவை ஆண்டு வந்த இந்திரா காந்திக்கும், சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இருந்த ராஜ்ய நேசமானது தமிழர்கள் மீது நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறையைத் தட்டிக் கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை. சிறிமாவோவின் வெளியுறவுக் கொள்கை தமக்குப் பாதகமில்லை என்று நினைத்த இந்திரா.இலங்கை இனப்பிரச்னையில் தலை நீட்ட விரும்பவில்லை.

தொடங்கியது ஆயுத மோதல்!

1977-ம் ஆண்டில் இலங்கையின் அதிபரான ஐக்கியத் தேசியக்கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழர்களை தமது முழுவல்லமை கொண்டு அடக்க முயன்றார். தமிழீழ விடுதலைப் போராளி களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை முன்னிறுத்தினார். தமிழ்ப் போராளிகளுக்கும் ஜே.ஆர்.ஜெய வர்த்தனாவின் அரசப் படைகளுக்கும் ஆயுத மோதல்கள் உருவாகின.

மோதல்களும் சாவுகளும் ரத்தங்களும் தமிழர் நிலத்தில் நித்தியமாயின. தமிழீழ விடுதலைக்காக தமிழ்ப் போராளி இயக்கங்கள் பல உருவாகியிருந்தன. ஆயுதம் தாங்கிப் போராடும் இளைஞர்கள் ராணுவத்தின் மீதும் அரச சொத்துகளின் மீதும் தாக்குதல்களை நிகழ்த்தினர். 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் ராணுவ ரோந்து வாகனத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்திய தாக்குதல் சிங்கள ஆட்சியாளர்களையும் இனவாதிகளையும் கதிகலங்கச் செய்தது. இதையடுத்து தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தமிழின அழிப்புக் கலவரமான **"ஜூலை கலவரம்"** நிகழ்ந்தது.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

பயங்கரவாத தடைச்சட்டம் தொடருமானால் அடக்குமுறையை எதிர்த்து போரிடநேரிடும்

பயங்கரவாத தடைச்சட்டம் என்பது இந்த நாட்டில் மீளவும் வேறு பாணியில் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக இல்லாது ஒழிப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் போதியளவு குரல் எழுப்பவில்லை என்று தான் கூறவேண்டும். ஏனென்றால் பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக போடப்பட்டது. அதற்கு முன்னர் ஜே.வி.பி இருந்த காலகட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது பலர் அந்த காலகட்டத்திலே சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்கள். தற்பொழுது யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலே பயங்கரவாத தடைச்சட்டம் என்பது அர்த்தமற்ற விடயமாகத் தான் இருக்கின்றது. காரணம் ஒரு அவசரகால தடைச்சட்டத்தை பயன்படுத்தி பல விடயங்களை செய்யமுடியும். ஆனால் இதிலே பயங்கரவாத தடைச்சட்டம் என்பது தொடர்ந்தும் இந்த நாட்டில் இருக்குமாக இருந்தால் அது மற்றுமொரு ஆயுத போராட்டத்திற்கு வித்திடும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. காரணம் தொடர்ந்தும் அடக்கி ஆளுவதற்கான ஒரு நடவடிக்கைகளையே இவர்கள் செய்து வருவதற்கான ஒரு முன்னெடுப்பாகவே இருக்கின்றது.

ஏனென்றால் தற்பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தை வைத்துக்கொண்டு குறிப்பாக நில ஆக்கிரமிப்புகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலே நிலங்களையும் வளங்களையும் சுரண்டுவதற்கு இவர்கள் ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அதற்காகத்தான் புதிதாக அமைக்கப்படுகின்ற பயங்கரவாத தடைச்சட்டமானது மிகவும் ஆபத்தான ஒன்றாகத் தான் அமையப்போகின்றது. எனவே அதிகாரங்களை கையில் எடுத்துக்கொண்டு தமிழினத்தை அடக்கியாளுகின்ற செயற்பாட்டிற்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தும் சென்று கொண்டிருந்தால் அவர்கள் இந்த நாட்டில் சமதானத்தை விரும்பவில்லை என்று தான் அடையாளப்படுத்தப்படுகின்றது. இலங்கையின் அனைத்து பகுதிகளிலுமே அந்தந்த அரசாங்கங்கள் தமக்கு ஏற்றாற்போல் மாபியாக்களை வைத்திருக்கின்றது. மாபியாக்களின் ஊடாகத்தான் குறித்த அரசாங்கம் இயங்கி வருகின்றது. இந்த மாபியாக்களுக்கு ஒரு சட்டமும் அதைத்தவிர பயங்கரவாத தடைச்சட்டத்தில் இன்னுமொரு சட்டமும் இருக்கின்றது. எனவே இந்த மாபியாக்கள் அத்துமீறுகின்ற செயற்பாடுகளை செய்கின்ற பொழுது அவர்களை கைது செய்யவும் அல்லது என் கவுண்டரில் சுட்டுக்கொல்லவும் அதற்கான ஒரு நடவடிக்கையாகத்தான் மற்றுமொரு பயங்கரவாத தடைச்சட்டம் என்பது இங்கு கொண்டு வரப்படுகின்றது. எனவே தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் கடல் வான் தரை என ஒரு இனத்தின் விடுதலைக்காக இறுதிவரையில் அவர்கள் போராடினார்கள் என்பது தான் வரலாறு.

எனவே இந்த வரலாற்றை நாம் அறிந்து ஒரு இனம் தொடர்ந்தும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டுமாக இருந்தால் அடக்கு முறைகள் வடபகுதிகளாக கொண்டுவரப்படுமாக இருந்தால் அது காலப்போக்கிலே கொண்டு வரப்படும் அப்படி கொண்டுவரப்படுமாக இருந்தால் இலங்கையை பொறுத்தவரையிலே ஜனநாயகத்திற்குரிய நாடு பல்வேறு துறை சார்ந்த நாடுகளும் உதவுவதற்கு முன்வரும். இந்தியா ஒருபோதும் அந்த நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்காது. தனது சுயலாப அரசியலுக்காக இந்தியா காலத்துக்கு காலம் தனது நிலைமைகளை மாற்றிக்கொண்டது. ஜெயலலிதா அம்மையார் இருக்கும் பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதான இன்னுமொரு சட்டம் கொண்டு வரப்பட்டு இந்தியாவிலே தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டார்கள். அதுமட்டுமன்றி 47 நாடுகளிலே தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாக ஆக்கப்பட்டார்கள். இதற்கு ஒரு முக்கியமான சூத்திரதாரியாக மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமன் அவர்கள் செயற்பட்டிருந்தார் என்பது தான் யதார்த்தம்.

எனவே பயங்கரவாத தடைச்சட்டம் என்ற விடயத்திலே இன்று றெலோ.புளொட். ஈபிஆர்எல்எப். ஈபிடிபி போன்ற இயக்கங்களும் இருக்கின்றன. இவர்களுக்கு ஒரு சட்டம் விடுதலைப்புலிகளுக்கு ஒரு சட்டம் என்றல்ல. இவர்களும் தமிழினத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடியவர்களாகத் தான் இருக்கின்றார்கள். குறிப்பாக இந்த தமிழ் பேசும் மக்கள் அனைவருமே பயங்கரவாதிகளாக 2009 யுத்த காலம் வரை பார்க்கப்படுகின்றது. ஏனென்றால் அடிக்கொரு அடியில் சோதனைச்சாவடி உருவாக்கப்பட்ட நிலையில் சோதனைச்சாவடியில் இருந்து ஒருவர் கொழும்பிற்கு செல்வதாக இருந்தால் அதுவொரு பாரிய வெற்றிகரமான விடயமாகத்தான் இருக்கின்றது. ஒருநாள் இரண்டு நாள் கூட வன்னியில் இருந்து வரும் மக்கள் செல்வதற்கு பாஸ் நடைமுறைகளை எடுத்து அவர்கள் புலனாய்வாளர்களால் விசாரிக்கப்பட்டு வடிகட்டப்பட்டுத் தான் கொழும்பிற்கு அனுப்பப்பட்ட காலம் அதுபோன்று கிழக்கில் இருந்து வருபவர்கள் வடிகட்டப்பட்டு அனுப்பப்பட்ட ஒரு காலம். அதுபோன்று கண்டி நுவரேலியா போன்ற மத்திய பிரதேசங்களில் இருந்து வருபவர்களும் வடிகட்டப்பட்டு அனுப்பப்படுகின்ற ஒரு நிலைமை தான் காணப்பட்டுக்கொண்டிருந்தது.

இந்த நிலைமை தற்போதைய போர் முடிவடைந்ததன் பின்னர் மாற்றப்பட்டுள்ளது. ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தை வைத்து பல விடயங்களை சாதிக்க முடியும் என அரசு எண்ணுகின்றது. அரசாங்கத்தை பொறுத்த வரையில் அவர்களுக்கு ஆதரவு வழங்கக்கூடிய நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை ஒரு பயங்கரவாதமாக பார்த்த காலம் மாறி தற்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடியவர்கள் என்பது புலப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் என்பது வெறுமனே போர் குற்றம் என்ற வரையறைக்குள் மூடிமறைத்துவிட முடியாது. இலங்கை அரசு இனப்படுகொலையை நடத்தியிருக்கின்றது. ஆனால் அவை சர்வதேச ரீதியாக ஜெனீவா வரை கொண்டுசெல்லப்பட்ட பொழுதிலும் அவ்வாறு இல்லை என்று அரசாங்கம் மற்றுமொரு தீர்மானத்தை கொண்டு வந்தது. 1990 காலப்பகுதியில் இருந்து ஆயுத குழுக்களாலும் மக்கள் கொலை செய்யபட்டனர் அவையும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு. ஒருவேளை சர்வதேச ரீதியாக இயங்கிக்கொண்டிருக்கின்ற விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் பயங்கவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டால் மீண்டும் உள்நுழைவார்கள் என்ற சந்தேகமும் நிலவி வருகின்றது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. பாராளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் என்ன சொல்லுகின்றது பயங்கரவாத செயல்களுக்கு எதிராகவும் பயங்கரவாதத்துடன் இணைந்து வேறு தவறுகளுக்கு எதிராகவும் இலங்கையையும் இலங்கை மக்களையும் பாதுகாக்கவும் இலங்கையில் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்படுகின்ற பயங்கரவாதத்தையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் தடுப்பதாகும்.

இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்கான ஆயுத்தம் செய்வதற்காக இலங்கையின் ஆட்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனை தடுப்பதாகவும் ஏற்பாடு செய்வதாகவும் பயங்கரவாத செயல்களையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் கண்டுபிடிப்பதற்காக ஏற்பாடு செய்வதாகும். அத்துடன் பயங்கரவாத செயல் ஒன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்து வேறு ஏதேனும் தவறை புரிந்துள்ள எவரையேனும் அடையாளங்காணப்படுதல் விசாரணைக்காக கைது செய்தல் அவரை தடுப்பு காவலில் தடுத்து வைத்தல் புலனாய்வு செய்தல் அவருக்கு எதிராக குற்றம் தொடுத்தல் மற்றும் அவருக்கு தண்டனை அளித்தல் என்பனவற்றிற்காகவும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தை நீக்குவதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டமூலமே இது. வெளிநாட்டு அலுவலக அமைச்சரால் 2018 ஒக்டோபர் 2 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறான பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை அரசாங்கம் ஏற்படுத்தினாலும் இவை அனைத்தும் அவர்களுக்கு சாதகமாகவே செய்யப்பட்டிருக்கின்றது என்பதே உண்மையான விடயம்.

தமிழ் தரப்பை பொறுத்தவரையில் தொடர்ந்தும் அவர்களின் அடிவருடிகளாக இருக்க வேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடாக இருக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவே ஏற்பாடு செய்யப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டமானது தொடர்ந்தும் வேறு வழியில் ஆபத்தை ஏற்படுத்தப்போகின்றது. இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பது பற்றி தமிழ் தரப்பு சிந்திக்க வேண்டும். அதனோடு இருக்கின்ற தமிழ் அரசியல் தரப்புக்களும் இந்த பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச ரீதியாக அழுத்தம் கொடுத்தால் மட்டுமே அரசாங்கத்தின் இந்த பிடியில் இருந்து நாம் தப்பித்துக்கொள்ளமுடியும். போர் தந்திரோபாயமாக பல்வேறு நாடுகள் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டது. தற்பொழுது அரசாங்கத்தினுடைய மாறுபட்ட கருத்தியல் அடிப்படையில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் நாட்டை தாரை வார்க்கும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. எனவே பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்தும் அரசாங்கம் வைத்திருப்பதன் நோக்கம் பூகோள ரீதியாக அரசாங்கத்திற்கு வரும் பாதிப்புக்களில் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்வதற்காகவே ஆகும்.

இலங்கை விவசாயத்துறை வீழச்சி அடையுமானால் கோட்டபாயவுக்கு என்ன நடந்ததோ அதுவே ரணிலுக்கும் நடக்கும்

முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளை கடந்துள்ள இந்த சூழ்நிலையில் இந்த நாட்டை ஆட்சி செய்த 2 பிரதான கட்சிகளும் இலங்கையின் ஒரு நிரந்தரமான பொருளாதார கொள்கையோ திட்டமிடலோ இல்லாமல் மாறாக இனவாதம் மதவாதத்தை பேசி இந்த நாட்டை சீரழித்து சின்னாபின்னமாக்கியுள்ள நிலைமை இருக்கின்றது. உண்மையில் இலங்கையில் இன்றிருக்கின்ற நீர்வளம் நில வளங்கள் இருக்கின்ற இந்த மண்ணில் வடக்கு கிழக்காக இருக்கலாம் அல்லது தெற்காக இருக்கலாம் நெல் உற்பத்தி என்பது 2 போகங்கள் செய்யக்கூடிய நிலை இருக்கின்றது.

வடகிழக்கு வெளியே மகாவலி திட்டத்திற்கு கீழ் இன்னும் சிறப்பாக மேட்டுநில பயிர்களும் செய்கின்றார்கள். நெல் உற்பத்தியும் செய்கின்றார்கள். ஆனால் முறையான ஒரு கொள்கைத் திட்டம் இல்லாமையினால் விவசாயிகள் நெல் உற்பத்தியினை செய்தும் நெல்லிற்கான சரியான நிர்ணயிக்கப்பட்ட விலை இல்லை அல்லது நெல் அறுவடை செய்யக்கூடிய காலத்தில் சீனாவிடம் இருந்தும் வேறு நாடுகளிடமிருந்தும் அரசியை இறக்குமதி செய்யும் நிலை இருக்கின்றது. எனவே இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல் உற்பத்தி என்பது இலங்கையில் உள்ள மக்களுக்கு முழுமையாக பயன்படுத்தி மேலதிகமான நெல்லைக் கூட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியவுக்கும் தான் இலங்கையிலும் வடகிழக்கினதும் விவசாய நெல் உற்பத்தி சிறப்பாக செய்ய முடியும்.

ஆனால் மாறி மாறி வருகின்ற இந்த அரசாங்கங்கள் விவசாயிகளுக்கான சரியான கொள்கைத் திட்டம் இல்லை. கோட்டபாய ராஜபக்சவின் அரசாங்கம் இன்று கவிழ்ந்தமைக்கு ஒரு காரணம் விவசாயிகளின் உர இறக்குமதியில் திடீரென கையை வைத்ததனால் தான் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து பெரிய எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியும் ஆட்சி மாற்றமடையும் நிலைமையும் இருக்கின்றது. எனவே விவசாயிகள் தோட்டப்பயிர்ச்செய்கைகளை செய்கின்றவர்களை ஊக்குவிக்க வேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு தேவையான கடன் உதவிகள் மற்றும் ஏனைய சந்தை வாய்ப்புக்கள் அதாவது சந்தை வாய்ப்புக்கள் தான் மிக மிக முக்கியமாக இருக்கின்றது. உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளை கொண்டு வந்து இன்று ஒரு விவசாயி நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலையில் அதனை கொடுக்க முடியாமல் இருக்கின்றது. உற்பத்தி செலவை விட விற்பனை செய்யும் பொருளின் விலை மிக குறைவாக இருக்கின்றது. எனவே விவசாயம் செய்பவர்கள் அந்த தொழிலை கைவிடவேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. எனவே விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் இந்த நாட்டின் வரவு செலவு திட்டத்தில் தேவையில்லாதளவு பெரும் தொகை நிதியை கொண்டு போய் பாதுகாப்பு செலவீனங்களுக்கும் வேறு வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துவாரே தவிர உண்மையில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு அல்லது தன்னிறைவடைவதற்கு வருடந்தோறும் அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் விவசாயிகளுக்கான கடன் உதவி திட்டங்கள் மானியங்கள் போன்ற உதவிகளை செய்தால் விவசாயம் தன்னிறைவு அடையக்கூடியதாக இருக்கும். விவசாயத்தை போன்று தான் இலங்கையை சுற்றி கடல் வளம் இருக்கின்றது. கடல் வளத்தில் மீனவர்கள் இன்று பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற ார்கள். மீனவர்களுக்கு செய்ய வேண்டிய உதவி திட்டங்கள் நவீன தொழில்முறையான வசதிகளை செய்தால் இலங்கையில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் இலங்கைக்கு மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் மீன்களை ஏற்றுமதி செய்யலாம்.

ஆனால் கடல் சூழ்ந்த நாட்டுக்குள் நாங்கள் இருந்து கொண்டும் கூட இன்று ரின் மீனை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்ற நிலை இருக்கின்றது. எனவே இந்த நாட்டின் விவசாயம் மீன்பிடி அதே போன்று கால்நடை வளர்ப்பு இவ்வாறான தொழில்களை சரியான முறையில் கொண்டு செல்வதற்கு இந்த அரசாங்கமோ அல்லது இந்த நாட்டை ஆட்சி செய்த எந்த அரசாங்கத்திடமும் நிரந்தரமான ஒரு பொருளாதார கொள்கைத் திட்டம் இல்லாத நிலையில் தான் இன்று இந்த நாடு வெளிநாடுகளில் இருந்து கையேந்தும் நிலைமையும் கடன்களை பெற்று மக்களுக்கு மேல் இந்த வரிச் சுமையை அவர்களின் தலையில் சுமக்க வேண்டிய நிலை இருக்கின்றது.

எனவே இந்த விடயத்தில் வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ் மக்களாகிய நாங்கள் உழைப்பாளிகள் நெல் உற்பத்தியாக இருக்கலாம் தோட்ட பயர்ச்செய்கையாக இருக்கலாம். அவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்கு புலம் பெயர்ந்த மக்கள் விவசாயிகளுக்கான உதவித் திட்டங்களை செய்ய வேண்டியிருக்கின்றது. அதே போன்று அரசாங்கத்துடன் இன்று அமைச்சர்களாக இருக்கின்ற தமிழ் அமைச்சர்கள் கால காலம் அரசாங்கத்தின் பங்காளிகளாகவும் அமைச்சர்களாகவும் தகுதியை பெற்றுக்கொண்டிருக்கின்றார்களே தவிர இந்த விவசாயிகளை மேம்படுத்துவதற்கோ கடற்தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கோ உரிய திட்டம் எதுவுமே இல்லாத நிலைமை இருக்கின்றது.

உர மானியங்கள் இல்லாமலும் பயிர்ச் செய்கைக்கு பழக்கப்பட்ட இந்த நிலப்பரப்பு தொடர்ந்தும் அதை செய்ய முடியாத சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான மாற்றுவழியை அரசாங்கம் கையாண்டதாக தெரியவில்லையே? உண்மையில் எங்களது மண் நீண்டகாலமாக இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்ட மண் என்பதனால் நெல் உற்பத்தியோ தோட்ட பயிர் உற்பத்திகளோ உரம் கிருமி நாசினி இல்லாமல் ஒரு பயிரை விளைவித்து அறுவடை செய்யமுடியாத நிலைமை தான் தற்பொழுது காணப்படுகின்றது. இதைத் தான் கோட்டபாய ராஜபக்ச அரசாங்கம் விவசாயத்திற்கான உரத்தை தடை செய்தது அதனால் தான் அரசாங்கம் கவிழ வேண்டிவந்தது. ஆனால் அந்த தரமற்ற உரங்களை இறக்குமதி செய்து அதனால் பல நோய்கள் பரவும் நிலையும் இருக்கின்றது. அதே நேரத்தில் உரம் இல்லாமல் இந்த விவசாய உற்பத்திகளை செய்ய முடியாத நிலைமையும் இருக்கின்றது. எனவே இது ஒரு நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் முறையாக ஆய்வு செய்து சரியான முறையில் பொது மக்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையில் இந்த விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் ஆனால் உர உற்பத்தியை கைவிட்டால் விவசாயம் முற்றுமுழுதாக விவசாய உற்பத்திகளை செய்யமுடியாத நிலை தான் உள்ளது.

வன்னி பிரதேசம் என்பது நீண்ட பரந்த நிலப்பரப்பை கொண்ட பிரதேசத்தில் யுத்தத்திற்கு பின்னர் மக்கள் தங்களது சொந்த தரிசு நிலங்களை சுத்தம் செய்து விவசாய தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற பொழுது இன்று பலரது காணிகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது. பொதுமக்கள் தங்களது காணிகளில் அரசாங்கம் வந்து தேக்க மரங்களை நட்டு அந்த காணிகள் சுபீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கத்தில் ஜனாதிபதி கூறுகின்றார். இந்த நாட்டில் உணவு உற்பத்தி உணவு பாதுகாப்பு அதை மேம்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்றார். மற்றுமொரு பக்கம் வனலாக திணைக்களங்கள் பொது மக்களின் காணிகளை சுபீகரித்துக்கொண்டு போகின்ற நிலைமைகளும் உண்டு.

இது மிக மோசமான செயல் ஒரு பக்கம் தொல்பொருள் திணைக்களம் இன்னுமொரு பக்கம் வனலாக திணைக்களம் இவர்களுக்கு பக்க பலமாக இராணுவம் பொலிஸ் கடற்படை இருக்கின்றது. எனவே நிலங்களை அபகரித்து ஒருபக்கம் வைத்துக்கொண்டு பின்னர் விவசாய உற்பத்தி விவசாய உணவு பாதுகாப்புகளைப் பற்றி கதைப்பதில் அர்த்தமில்லை. எனவே சுதந்திரமாக பொது மக்கள் தங்களது நிலங்களில் உணவு உற்பத்தியை செய்தால் தான் இந்த நாட்டின் பசி பஞ்சம் பட்டினியை தீர்க்க முடியும். எனவே இதை அரசாங்கம் உடனடியாக பொது மக்களின் காணிகளை பறிமுதல் செய்து தேக்க மரங்களை நடுவது அல்லது அரசாங்கள் தங்களது தேவைக்காக சுபீகரிப்பதை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இன்றுள்ள பிரச்சனை இது மட்டுமல்ல நிலப்பிரச்சனை பௌத்த மயமாக்கல் எங்களது கலாச்சார விழுமியங்களை அழிப்பதில் இருந்து அவர் சுதந்திர தினத்திற்கு முன் தமிழ் மக்களுக்கு நான் ஒரு தீர்வை தருவேன் என்ற வரையில் பல வாக்குறுதிகளை தற்பொழுதும் கூறியிருக்கின்றார்.

நல்லாட்சிக் காலத்திலும் இதே போன்று பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டது. ஆனால் குறைந்த பட்சம் இந்த அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய 13 ஆம் திருத்தச்சட்டத்தை மாகாண சபை முறைமைகளை முழுமையான அதிகாரங்களை நிறைவேற்றும்படி தொடர்ச்சியாக இந்தியா.இலங்கை அரசாங்கத்திற்கு அதனை வலியுறுத்தியிருக்கின்றது. ஐ.நா சபையில் வலியுறுத்தியிருக்கின்றது. தமிழ் கட்சிகள் இதை முழுமையாக நடைமுறைப்படுத்த சொல்லி கேட்டிருக்கின்றது. எனவே அதை நடைமுறைப்படுத்தாத மட்டில் மாகாணசபையை கூட கடந்த நான்கு வருட காலமாக தேர்தலை நடத்தாமல் இருக்கின்ற நிலைமையும் இருக்கின்றது. எனவே தற்பொழுது இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சனைகளில் இருந்து அரசியல் தீர்வை காணும் வரையில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார்.

குறைந்தபட்சம் அரசியல் யாப்பில் இருக்கின்ற இந்த 13 ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் ஓரளவிற்கு எங்களது நில அபகரிப்புக்கள் தொல்பொருள் திணைக்களத்தின் பிரச்சனைகள் குடியேற்றங்கள் பௌத்த மயமாக்கல் இவ்வாறான விடயங்களையாவது குறைக்கும் நிலைமை இருக்கின்றது. எனவே இந்த அரசாங்கம் முதலில் 13 ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி தான் பலரும் வலியுறுத்திக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் அதை செய்வதற்கு மறுக்கின்றது.

கிழக்கில் மகாவலி ஊடாக நில அபகரிப்பு பிள்ளையானுக்கு எதிராக சாணக்கியன், வியாழேந்திரன் போர்கொடி!

கடந்தவார தொடர்ச்சி...

சிவனேசன்துரை சந்திரகாந்தனுடன் இணைந்து அவருக்கு சாதகமாக நான் கதைப்பதாக குற்றச்சாட்டு பரவலாக இருக்கின்றது. இதில் உண்மை இல்லை என்றும் தெரிவித்தார். நிலைமை இவ்வாறிருக்க கிழக்கு அரசியலை பொறுத்தவரையில் முஸ்லிம்கள் சுரண்டுகின்ற ஒரு இடமாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அன்றைய காலத்தில் அரசாங்கத்துடன் இணைந்து காணி சுபீகரிப்பை ஏற்படுத்தியிருந்தார்கள் கிழக்கில் 40 சதவீதமான காணிகளை முஸ்லிம்கள் சுரண்டியிருக்கின்றார்கள். பிரதானமான தமிழ் மக்கள் பூர்வீகமாக கொண்ட இடங்களில் அவர்களின் பள்ளிவாசல்களை அமைத்திருக்கின்றார்கள்.

முஸ்லிம்களின் அபகரிப்பிற்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்போ அல்லது அரச சார்பான அரசியல்வாதிகளோ குரல் கொடுப்பதில்லை அவர்களிடம் முட்டிமோதுவதுமில்லை. வெளியில் முட்டி மோதுவது போன்ற விடயத்தை காண்பித்து கோடி கணக்கில் வெகுமதிகளை பெற்று பின்னர் அவர்களுடன் உல்லாச விடுதிகளில் கொண்டாட்டம் போடுகின்றார்கள். கடந்த பாராளுமன்ற தேர்தலிலும். மாகாணசபைத் தேர்தலிலும் முஸ்லிம்களுடன் கைகோர்த்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பல இடங்களை இழக்கும் சூழல் ஏற்பட்டது அதுமட்டுமன்றி முஸ்லிம் ஒருவர் முதலமைச்சர் அதிகாரத்தை கைப்பற்றினார் வடக்கரசியல் போன்றதல்ல கிழக்கரசியல் மழைக்கு நேற்று முளைத்த காளான்கள் போன்று பல அரசியல்வாதிகள் பல ஊடகவியலாளர்கள் எழும்பியிருக்கின்றார்கள் பக்க சார்பான ஊடகம் என்பது தமிழ் பரம்பில் ஏற்றுக்கொள்ள முடியாதது ஒன்று.

தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர் பிரதேசத்தில் ஒரு ஊடகவியலாளர் செயற்படும் விதத்திலே தமிழனின் உரிமைகளை பெற்றுக்கொள்ளமுடியும். ஈழப்போரின் இறுதியில் ஆயுத கட்சிகளின் பிளவுகளும் எம் தமிழினம் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்தது கருணா. பிள்ளையான் என மாறி மாறி கிழக்கில் சுட்டுத்தள்ளிய சம்பவங்களும் நினைவிற்கு வருகின்றன. ஆயுதம் ஏந்திய போராளிகள் பலர் இன்னமும் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்துடன் கடந்த காலங்களில் செயற்பட்டவர்களும் இன்று தமிழரசு கட்சி என்ற போர்வையில் உழவாளிகளாக பயணிக்கின்றனர். எது எவ்வாறாயினும் சிங்கள பேரினவாதிகள் தாம்பலதட்டில் வைத்து உங்களுக்கான தீர்வை தரப்போவதில்லை என்பதனை தமிழ் தரப்பு உணர்ந்துகொள்ள வேண்டும். போராட்டம் என்பது ஒரு அடக்கு முறைக்கு எதிராகவே இடம்பெறுகின்றது அது மீண்டும் தொடருமாக இருந்தால் இந்த நவீன யுகத்தில் அடுத்த தலைமுறை அதைப்பற்றி சிந்திக்க நேரிடும் எம் நிலங்களும் வளங்களும் அழிக்கப்படாத நிலைமை உருவாக்கப்பட வேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் வடகிழக்கில் 87 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பௌத்த மயமாக்கல் தொடர்கின்றது. அதனை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கைகளை தமிழ் தரப்பு மேற்கொள்ள வேண்டும். தமிழீழ மக்களின் போராட்டத்தை இலங்கை அரசு பயங்கர போராட்டமாகவே கருதுகின்றது தற்பொழுது அரசியல் ரீதியான தீர்வு நாம் அடைய வேண்டும் அதற்காக கிழக்கை பொறுத்தவரையில் முஸ்லிமிடம் இருந்து இருப்பை தக்கவைப்பதனாலே ஒரு வடகிக்கிணைந்த தமிழ் தாயகம் உருவாக்கப்படும். சிறிது காலம் பிள்ளையான் அவர்கள் முஸ்லிம்களை எதிர்த்தார் விடுதலைப் புலிகள் இருந்த கால்த்தில் முஸ்லிம்களுக்கு அதிகூடிய எதிரியாக இருந்தவர் பிள்ளையான். பின்னர் ஹிஸ்புல்லாவுடன் கைகோர்த்த காலமும் இருக்கின்றது. எது எவ்வாறாயினும் தமிழ் பரம்பில் பணியாற்றுகின்ற அரசியல்வாதிகள் உங்கள் உள் மனதை தட்டிப்பாருங்கள் தமிழினத்திற்கு சிங்கள பேரினவாதிகள் இழைத்த துரோகம் கிழக்கில் ஏராளம். சத்திரகொண்டான் கொக்கட்டிச்சோலை உட்பட ஏராளமான படுகொலையினை முஸ்லிம் ஊர்காவற் படையினர் கிழக்கில் நடத்தியிருந்தனர். முஸ்லிம்களை ஆதரித்து பேசுவதாக சாணக்கியன் செயற்படும் விதம் சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது. தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்கின்றோம் என்ற போர்வையில் தமிழ் கட்சிகளுக்குள் இடையில் அடிபாடு ஏற்படுத்துவதால் எதனையும் சாதிக்க முடியாது தன்மானம் கொண்ட தமிழர்களாக தலை நிமிர்ந்து வாழ வேண்டுமாக இருந்தால் பேரினவாதிக்கு எதிராக எமது அகிம்சை யுத்தத்தை கொண்டு சென்றால் மட்டுமே அது வடக்கிலும் கிழக்கிலும் சாத்தியமாகும் என்பது இன்றைய யதார்த்தம்.

மரணத்தை வென்று இயேசு உயிர்த்த நன்னாள்

> **“மானிட மகன் மக்களின் கையில் ஒப்படைக்கப்பட இருக்கிறார். அவர்கள் அவனைக் கொலை செய்வார்கள். கொல்லப்பட்டு மூன்று நாட்களுக்கு பின் அவர் உயிர்த்தெழுவார்.”**

ஒவ்வொரு உயிர்ப்பு விழாவும் நம்மில் சில, பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் நாமும் இயேசுவோடு உயிர்ப்போம். இன்று இறைமகன் இயேசு மகிமையோடும் வல்லமையோடும் உயிர்த்தெழுந்த உயிரிப்புப் பெருவிழாவினை உலகனைத்தும் வாழ் கிறிஸ்தவ மக்கள் பெரு அக்களிப்போடு கொண்டாடுகின்றார்கள். சாவின் நின்று உயிர்த்து எழுதல் என்பது இறைவன் ஒருவரால் மட்டும் நிகழ்த்தக் கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி. மானிட இனமானது பாவத்தில் வீழ்ந்து, சாவு, மரணம் என்ற சாபத்திற்கு ஆளானதால் இறைமகன் இயேசு தமது அற்புதமான உயிர்ப்பினால் சாவை வென்று வெற்றி வாகை சூடி மீண்டும் நமக்கு நித்திய பேரின்ப வாழ்வின் நம்பிக்கையைப் பெற்றுத் தந்தார். இதன் மூலம் சாவை வென்ற சத்தியனானார்.

திருக்கோவில் இன்று இறைமகன் இயேசு மகிமையோடும் வல்லமையோடும் உயிர்த்தெழுந்த உயிரிப்புப் பெருவிழாவினை உலகனைத்தும் வாழ் கிறிஸ்தவ மக்கள் பெரு அக்களிப்போடு கொண்டாடுகின்றார்கள். உயிர்ப்புப் பெருவிழாவினைக் காணவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடவுமே கடந்த நாற்பது நாட்களாக நாம் நோன்பிலிருந்து மாபெரும் ஆயத்தம் செய்தோம். உயிர்ப்பு இல்லையென்றால் சிலுவைக்கு எவ்வித அர்த்தமும் இல்லாமல் போய்விட்டிருக்கும். இயேசு வல்லமையோடு உயிர்த்தெழுந்தார். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் தாங்கள் பறை சாற்றிய நற்செய்திகள் யாவுமே பொருளற்றதாய் போயிருக்கும் என்று புனித பவுல் கூறுகிறார். ஒழிந்திருக்கும்.

இன்று நம் திருமறையானது உயிர் வாழ்கின்றனதென்றால், அதற்கு இயேசுவின் உயிர்ப்பே மூலகாரணம். சாவின் நின்று உயிர்த்து எழுதல் என்பது இறைவன் ஒருவரால் மட்டும் நிகழ்த்தக் கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி. மானிட இனமானது பாவத்தில் வீழ்ந்து, சாவு, மரணம் என்ற சாபத்திற்கு ஆளானதால் இறைமகன் இயேசு தமது அற்புதமான உயிர்ப்பினால் சாவை வென்று வெற்றி வாகை சூடி மீண்டும் நமக்கு நித்திய பேரின்ப வாழ்வின் நம்பிக்கையைப் பெற்றுத் தந்தார். இதன் மூலம் சாவை வென்ற சத்தியனானார். மத, இன, மொழி, நிற வேறுபாடின்றி மனுக்குலம் மீட்படைய தம்மையே கல்வாரியில், சிலுவையில் தியாகப் பலியாக்கி முன்னர் அவர் உரைத்தபடியே மூன்றாம் நாள் உயிர்த்த அவரின் அற்புதச் செயல் நம் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகிறது.

இயேசுவின் உயிர்ப்பு அவராலேயே முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதொன்றாகும். "மானிட மகன் மக்களின் கையில் ஒப்படைக்கப்பட இருக்கிறார். அவர்கள் அவனைக் கொலை செய்வார்கள். கொல்லப்பட்டு மூன்று நாட்களுக்கு பின் அவர் உயிர்த்தெழுவார். (மாக் 9 : 31) கல்லறை மேட்டினின்று 'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே' என்று கூறி தன் உயிர்த்தெழுதலின் அடையாளமாக இறந்த லாசாரை எழுப்பினார் இயேசு. "இத் தேவாலயத்தை இடித்துப் போடுங்கள். மூன்று நாட்களில் கட்டியெழுப்புவேன்" என்று கூறிய பொழுது தன் உடலாகிய பேராலயத்தையே அவர் குறிப்பிட்டிருந்தார். தெய்வத் திருமகனாலன்றி வேறெவராலும் இப்படிக் கூற முடியாது.

இயேசுவின் உயிர்ப்பு நமக்கெல்லாம் ஒரு முக்கியமான மறையுண்மையாகும். இயேசு உயிர்த்து விட்டார் என்ற செய்தியைக் கேட்ட அவர் கல்லறைக்கு வந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் சென்றனர். தெய்வத் திருமகன் பிறந்தவுடன் வான தூதர் இடையர்களுக்குத் தோன்றி மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவித்தனர். இயேசுவின் பிறப்பைப் போலவே அவரது இறப்பும், உயிர்ப்பும் நமக்கு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும். ஒவ்வொரு உயிர்ப்பு விழாவும் நம்மில் சில, பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நாமும் இயேசுவோடு உயிர்ப்போம். அன்புள்ளம், தியாக உள்ளம், பிறருக்குத் தன்னையே அளிக்கும் உள்ளம் வளர வேண்டும்.

தமிழ்,சிங்கள புத்தாண்டு

தமிழ்ப் புத்தாண்டு **(Tamil New year)** தமிழர் புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழாவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும்இ பிற நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர். ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி.11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும். சூரிய மேச இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது.

ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில கிரெகொரிய நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 நாட்களில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதே. நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக்காலம் கணிக்கப்படுகிறது.

வரலாறு

தமிழரிடையே புத்தாண்டு என்ற பண்டிகை வழக்கில் இருந்ததற்கான பழைய சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கார்காலத்தின் ஆரம்பமான ஆவணியை ஆண்டுத்தொடக்கமாக தமிழர்கள் கொண்டிருக்கக் கூடும் என்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்குப் பிந்திய நிகண்டுகளில், ஆவணியே முதல் மாதம் என்ற குறிப்பைக் காணமுடிகின்றது. பொ.பி பதினான்காம் நூற்றாண்டில் தொல்காப்பியத்துக்கு உரைவகுக்கும் நச்சினார்க்கினியரும் ஆவணியே முதல் மாதம் என்கின்றார். ஆவணி முதல் மாதம் என்பது கணிப்பில் பயன்பட்டாலும், அதன் போது புத்தாண்டு என்று பண்டிகை கொண்டாடப்பட்டதா என்பது தொடர்பாக போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

தமிழ் நாட்காட்டி இராசிச் சக்கரத்தை காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேழத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. சங்க இலக்கியமான நெடுநல்வாடையில் மேழமே முதல் இராசி என்ற குறிப்பு காணப்படுவதால், அதை மேலதிக சான்றாகக் கொள்வர்.

எனினும், பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய அகத்தியர் பன்னீராயிரம், பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புட்ப விதி முதலான நூல்களே தெளிவாக சித்திரை முதல் மாதம் என்று சொல்கின்றன. பங்குனியின் இறுதிநாட்களில் அல்லது சித்திரை முதல் நாளில் தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். மலைபடுகடாம் "தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை" என்றும், பழமொழி நானூறு "கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" என்றும் பாடுவதால் இளவேனில் துவக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலங்கையில் தமிழரும் சிங்களவரும் சித்திரை ஒன்றையே புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள்.

பொ.பி. 1310-ல் இலங்கையை ஆண்ட தம்பதெனியா மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகுவின் அரசகுருவான தேனுவரைப்பெருமாள் எழுதிய "சரசோதி மாலை" எனும் நூலில் வருடப்பிறப்பின் போது செய்ய வேண்டிய சடங்குகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கையின் திருக்கோணேச்சரம், பொ.பி. 1622-ம் ஆண்டு சித்திரை மாதம், தமிழர் புத்தாண்டு அன்று கொள்ளையிடப்பட்டதாக போர்த்துக்கீசர் குறிப்புகள் சொல்வதையும் நாம் ஊன்றி நோக்கலாம்.

மரபுகள்

புத்தாண்டுக்கு முந்தைய நாட்களை வீடு வாசலை சுத்தம் செய்வதிலும், அலங்கரிப்பதிலும் தமிழர் செலவழிப்பர். மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கலப்பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டறையில் வைத்து, அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. புத்தாண்டன்று அதிகாலையில் நீராடி கோலமிட்டு, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும். வாழ்க்கை என்றாலே கசப்பும் இனிப்பும் கலந்தது தான். இப்புத்தாண்டிலும் கசப்பும் இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூப்பச்சடிஇ மாங்காய்ப்பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.

இலங்கையில் புத்தாண்டு பிறக்கும் விசு புண்ணியக் காலத்தில், ஆலயத்தில் வழங்கப்படும் மருத்து நீர் எனப்படும் மூலிகைக் கலவையை இளையவர்களின் தலையில் மூத்தோர் வைத்து ஆசீர்வதிப்பர். அதன்பின்னர் நீராடி அவர்களிடம் ஆசி பெற்று, குறித்த சுபவேளைகளில் கைவிசேடம் அல்லது கைமுழுத்தம் பெறுவர். மூத்தவர்களால் இளையவர்களுக்கு, புத்தாண்டு அன்பளிப்பாக வழங்கப்படும் பணமே கைவிசேடம் எனப்படுகிறது. போர்த்தேங்காய் உடைத்தல், வழுக்கு மரம் ஏறல், யானைக்குக் கண் வைத்தல், கிளித்தட்டு, ஊஞ்சலாடல், முட்டி உடைத்தல், வசந்தனாட்டம், மகிடிக்கூத்து, நாட்டுக்கூத்து முதலானவை இலங்கையின் பாரம்பரிய புத்தாண்டுக் கலையாடல்கள் ஆகும்

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே ரணிலின் இலக்கு!

இலங்கை இனியும் வங்குரோத்து அடைந்த நாடல்ல என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஏழு பில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்ளவதற்கான அனுமதி. திங்கட்கிழமை (20) கிடைத்திருக்கின்ற நிலையில். ரணில் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளை ரணில். ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டது முதல் மும்முரமாக முன்னெடுத்திருந்தார். குறிப்பாக. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு. எரிபொருட்களின் விலை அதிகரிப்பு. மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்று நாட்டின் பொருளாதார சுமையை மக்கள் மீது சுமத்தும் வேலைகள் நடைபெற்று வந்தன. அதன் பிரகாரம். கடன்களை திருப்பிச் செலுத்தக் கூடிய வல்லமையை இலங்கை கொண்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கு. இந்தியாவும் சீனாவும் கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கிய கடன் உதவிகளை. காலம் தாழ்த்தி மீள வசூலித்துக் கொள்வதற்கு இணங்கியமை முக்கிய காரணம். இந்தக் காரணங்களால். இலங்கை வங்குரோத்து அடைந்த நாடல்ல அது. பெற்றுக்கொள்ளும் நிதியுதவிகளை மீளச் செலுத்துவதற்கான வலு. அதனிடம் இன்னும் இருக்கின்றது என்று சர்வதேசம் நம்புகின்றது. அதனால் தான். சர்வதேச நாணய நிதியம். ஏழு பில்லியன் டொலரை வழங்குவதற்கு இணங்கியிருக்கின்றது என்று கொள்ளலாம். அதை நோக்கும் போது. ரணில் குறிப்பிடுவது போல. இலங்கை இனியும் வங்குரோத்து அடைந்த நாடல்ல என்பது தர்க்க ரீதியில் சரிதான்!

ஆனால். இலங்கை சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை கிட்டத்தட்ட 64 பில்லியன் டொலர் என்பது பொருளாதார வல்லுநர்களின் வாதம். இந்தக் கடன் தொகையை இலங்கையால் இப்போது இருக்கும் பொருளாதார நிலையில் திருப்பிச் செலுத்துவதற்கு குறைந்தது 50 வருடங்களாவது ஆகும் என்பதும் அவர்களின் கருத்து. இலங்கையின் நிலத்துக்கு கீழ் அதிசயிக்கத் தக்க வகையில் எரிவாயுவோ. பெற்றோலியப் பொருட்களோ கிடைத்து. அதைக் கொண்டு நிதி வருவாய். எதிர்பார்க்காத அளவுக்கு அதிகரித்தால் அன்றி. 64 பில்லியன் டொலரைச் செலுத்துவது என்பது உண்மையில் நடக்கக் கூடிய காரியமல்ல. அந்த கடன்கள் மீதான வட்டி. நாளுக்கு நாள் அதிகரித்து ஒவ்வோர் ஆண்டும் செலுத்த வேண்டிய கடன் தொகை இன்னும் இன்னும் அதிகரிக்கவே செய்யும். அது. நாட்டு மக்களின் பல தலைமுறைகளின் தலைகளில் வரியாகவும். விலை அதிகரிப்பாகவும் எழுதப்படும்.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல். அதன் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பு. பௌத்த சிங்கள மேலாதிக்கவாத சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டது. அது. நாட்டின் சமூக. கல்வி. பொருளாதாரக் கட்டமைப்பை சிதைத்து வந்தது. சுதந்திரம் அடைந்த போது. இலங்கையை முன்னுதாரணமாகக் கொண்டு முன்னேற வேண்டும் என்று நினைத்த சிங்கப்பூர் என்ற அனைவராலும் கைவிடப்பட்ட தேசம். இன்றைக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளோடு போட்டி போட்டு பொருளாதார வெற்றியைக் கண்டிக்கின்றது.

ஆனால். இலங்கையோ. படிப்படியாக வீழ்ச்சியடைந்து. 75ஆவது சுதந்திர தினத்தை அடைவதற்கு முன்னதாகவே. 'வங்குரோத்து அடைந்த நாடு' என்ற பெயரைப் பெற்றது. இன்றைக்கு. 'வங்குரோத்து அடைந்த நாடல்ல' என்பதை சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவியைப் பெறுவதற்கான அனுமதி கிடைத்திருப்பதை. ரணில் ஓர் ஆதாரமாக முன்வைத்து. தன்னுடைய ஆட்சிக்கான நற்சான்றிதழை மக்களிடம் கோருகின்றார். அதிலும். இன்னும் ஒரு படி மேற்சென்று. அவரது கட்சியான ஐக்கிய தேசிய கட்சியினர். கடனுதவிக்கான அனுமதி கிடைத்ததை வெடி கொளுத்தி ஆர்ப்பரித்துக் கொண்டாடினார்கள். அதைக் காணும் போது. இந்த நாட்டின் ஆட்சியாளர்களினதும் அரசியல் கட்சிகளினதும் சிந்தனை எவ்வளவு சிறிதானது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தொகுதிக் கடனாக 3.3 பில்லியன் டொலர் எதிர்வரும் மாதமளவில் கிடைக்கும் என்று அரசாங்கம் நம்புகின்றது. அது கிடைத்ததும் எரிபொருட்களின் விலை குறைக்கப்படும் என்று அந்தத்துறை அமைச்சர் கூறியிருக்கின்றார். அது போல. இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்கிக் கொள்ளவும் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். இவையெல்லாம் மக்கள் மீதான அபிமானத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அல்ல! மாறாக. தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளாகும். தேர்தல் வெற்றிகளைக் குறிவைத்து வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்றுவிட்டு. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதை இலங்கையின் ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் செய்து வந்திருக்கிறார்கள்.

அதனால். நாட்டு மக்கள் மீதான பொருளாதார சுமை என்பது பெருமளவு அதிகரித்திருக்கின்றது. கடன்களை கடந்த காலங்களில் எந்தவித பொருளாதார திட்டங்களும் இன்றி வாங்கிக் குவித்தமையும். அதனை ஆட்சியில் இருந்தவர்கள் சுரண்டி. தங்களின் குடும்பங்களை வாழ வைத்துக் கொண்டமையாலும் நாட்டின் நாணயப் பெறுமதி ஒவ்வொரு நாளும் பாரிய வீழ்ச்சியைக் கண்டு வந்திருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது. இலங்கை ரூபாயின் பெறுமதி என்பது. அமெரிக்க டொலரின் பெறுமதியை விட அதிகமாகும். அந்த நிலையில் இருந்து இன்றைக்கு டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி என்பது கிட்டத்தட்ட 400 ரூபாய் என்ற அளவை எட்டியிருக்கின்றது.

ஏழு பில்லியன் டொலர் நாட்டுக்குள் வரப்போகின்றது என்பதைக் காட்டிக் கொண்டு. டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதியை 320க்குள் வைத்துக் கொள்ள அரசாங்கம் முயல்கின்றது. ஆனால். பெறும் கடன்களுக்கான வட்டி உள்ளிட்டவை எல்லாமும் சேர்ந்து கொண்டால். டொலருக்கு எதிரான ரூபாயில் பெறுமதி இந்த ஆண்டின் இறுதிக்குள் 400 ரூபாய் என்ற அளவை எட்டும் என்பது பொருளாதார அறிஞர்களின் கருத்து.

அவ்வாறான நிலை ஏற்பட்டால். நாட்டில் ஏற்கெனவே காணாமல் போய்க்கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கம் என்ற பெரும்பான்மையான மக்கள். வாழ்வதற்கான சிக்கல்களை இன்னும் இன்னும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நாடு. 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடு' என்ற நிலையில் இருந்து. 'வறுமைக் கோட்டுக்கு கீழான நாடு' என்ற நிலையை எட்ட வேண்டியிருக்கும். வெளியாரிடம் இருந்து கடன்களைப் பெற்று. அவசரப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணுவதற்குப் பதிலாக. நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுப்பதுதான் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமாக இருக்கின்றது.

எளிய முறையில் சொல்வதென்றால். வறுமையில் வாடும் ஒருவனுக்கு மீனைக் கொடுப்பதைக் காட்டிலும் மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பது என்பது. அவனது பசியை மட்டுமல்ல. அவனது பொருளாதார மீட்சிக்கும் உதவும் என்பது வழக்கு. இந்த நிலை குறித்துதான் மக்களுக்காக சிந்திக்கும் எந்தவொரு ஆட்சியாளரும் செய்ய நினைப்பார்கள். மாறாக. தேர்தலை வெற்றிகொள்வதற்காக. நாட்டை மேலும் மேலும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளி. விளையாடும் வேலைகளைப் பார்க்க மாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடனுதவியைக் கொண்டு. தன்னுடைய தேர்தல் வெற்றிக்கான ஏற்பாடுகளை மாத்திரமே ரணில் மேற்கொள்ள நினைக்கிறார். கடந்த காலங்களில் தன்னையொரு ஜனநாயக விரும்பியாக காட்டிக் கொண்ட அவர். எப்போதோ நடக்க வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த விடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றார். அந்தத் தேர்தல் நடந்தால். தன்னுடைய ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் கனவு எப்போதோ நீர்த்துப் போயிருக்கும் என்பது அவருக்கு தெரியும். அதனால் தான். தேர்தலை நடத்துவதற்கு நிதி அமைச்சு பணத்தினை வழங்காமல் தேர்தல் ஆணைக்குழுவை அலைக்கழிக்கின்றது.

இதன்மூலம். தேர்தல் குறித்த எதிர்பார்ப்புகளை எதிர்க்கட்சிகளிடம் இல்லாமல் செய்து விட்டு. நேரடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்தும் திட்டத்தை ரணில் முன்னெடுக்கின்றார். அதில். தன்னை முதன்மைப் போட்டியாளராக முன்னிறுத்துவதற்காக. சர்வதேச நாணயத்திடம் பெற்ற கடன் தொகையை பயன்படுத்தப் போகின்றார். இது. யாராலும் சகிக்க முடியாத அரசியல் பொறுப்பின்மை. இதன் மூலம். நாடு மீட்கப்பட முடியாத அலைக்கழியும் நிலைக்கு செல்லும். அது. மக்கள் வாழ முடியாத ஒரு சூழலை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்கு வழிகளை உருவாக்கும்.

சினி துளிகள்

மீண்டும் நயன்தாராவுடன் இணைந்த ஜெய்

2013ம் ஆண்டு அட்லீ இயக்கத்தில் வெளியான படம் ராஜா ராணி. இப்படத்தில் நயன்தாரா. ஜெய். ஆர்யா. நஸ்ரியா. சந்தானம் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்திருந்தார். விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்ற இப்படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

புதிய அறிவிப்பு ஜெய்-நயன்தாரா இணைந்து நடித்திருந்த இப்படத்திற்கு பிறகு மீண்டும் இருவரும் இணைந்துள்ளனர்.

அதன்படி நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் தமிழ். தெலுங்கு. கன்னடா. மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளில் தயாராகவுள்ள நயன்தாராவின் 75வது படத்தில் ஜெய் இணைந்துள்ளதாக போஸ்டர் வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

நடிகர் ஜெய்யின் பிறந்தநாளை முன்னிட்டு ரசிகர்களுக்காக சிறப்பு போஸ்டர் வெளியிட்டு படக்குழு சர்ப்ரைஸ் கொடுத்துள்ளது.

பிரபாஸ் சலார் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு

கே.ஜி.எப். திரைப்படத்தின் பிரம்மாண்ட வெற்றியை தொடர்ந்து. இயக்குனர் பிரசாந்த் நீல் அடுத்ததாக "சலார்" திரைப்படத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தில் "பாகுபலி" திரைப்படத்தில் நடித்திருந்த பிரபாஸ் நடிக்க உள்ளதாக அறிவிப்பு வெளியானதில் இருந்து.

இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. கே.ஜி. எப். திரைப்படத்தை தயாரித்த ஹோம்பாலே பிலிம்ஸ் சலார் படத்தையும் தயாரிக்கிறது.

இந்த படத்தில் வரதராஜ மன்னார் என்ற கதாபாத்திரத்தில் நடிகர் பிரித்விராஜ் நடிக்கிறார். இந்நிலையில் சலார் படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி இப்படம் வருகிற செப்டம்பர் 28ம் திகதி வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ரசிகர்கள் பலரும் இணையத்தில் வைரலாக்கி வருகின்றனர்.

ராஷ்மிகா கையில் விஜய் தேவரகொண்டா மோதிரம்..

தமிழில் கார்த்தியுடன் சுல்தான் படத்தில் நடித்து பிரபலமான ராஷ்மிகா மந்தனா தொடர்ந்து விஜய் ஜோடியாக வாரிசு படத்தில் நடித்தார். தெலுங்கு. கன்னட மொழிகளில் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். இவர் நடித்த புஷ்பா படம் ராஷ்மிகாவின் சினிமா பயணித்தில் திருப்புமுனையாக அமைந்தது. இந்தி மொழி படங்களிலும் நடிக்கிறார்.

ஏற்கனவே கன்னட நடிகர் ரக்ஷித் ஷெட்டியை ராஷ்மிகா காதலித்தார். 2017-ல் இவர்களுக்கு திருமண நிச்சயதார்த்தமும் நடந்தது. ஆனால் அடுத்த வருடமே கருத்து வேறுபாடு ஏற்பட்டு திருமணத்தை ரத்து செய்து பிரிந்தனர். பின்னர் தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவுடன் இணைத்து பேசப்பட்டார். இருவரும் மாலத்தீவுக்கு ஜோடியாக சென்று வந்ததாகவும் கிசுகிசுக்கள் வந்தன.

இதையடுத்து நடிகை ராஷ்மிகா தனது பிறந்த நாளின் போது வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த வீடியோவில் அவர் கையில் அணிந்திருந்த மோதிரம் விஜய் தேவரகொண்டாவின் விருப்பமான மோதிரம் என்றும் இருவரும் ஒரே வீட்டில் தங்கியுள்ளதாகவும் விரைவில் மகிழ்ச்சியான செய்தியை ராஷ்மிகா கூறுவார் என்றும் ஊடகம் ஒன்று செய்தியை வெளியிட்டிருந்தது.

இது சலசலப்பை ஏற்படுத்திய நிலையில். நடிகை ராஷ்மிகா அந்த ஊடகம் வெளியிட்டிருந்த பதிவை பகிர்ந்து "ரொம்ப யோசிக்காதீங்க" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது வைரலாகி வருகிறது.

பாலியல் சீண்டல்களை தடுக்க ஆண்கள் குரல் கொடுக்க வேண்டும் –ரச்சிதா மகாலட்சுமி

சமீபகாலமாக பெண்களுக்கு பெரிய திரையில் மட்டுமல்ல , சின்னத்திரையிலும் பாலியல் தொல்லை அதிகரித்திருக்கிறது. இதனை வாணி போஜன். பாண்டியன் ஸ்டோர் தீபிகா போன்றோர் வெளிப்படையாக பேசியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் சரவணன் மீனாட்சி தொடர் நடிகை ரச்சிதா மகாலட்சுமி இது பற்றி கூறியதாவது. உலகம் தோன்றிய நாள் முதலாகவே இது இருந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த நிலை மாறும் என்பதெல்லாம் பொய். இது மாறவே மாறாது. மாறுமென்று ஆறுதலுக்காக வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். அதனால் நம்மை நாம் தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நமக்காக யாரும் வந்து குரல் கொடுக்க மாட்டார்கள். காப்பாற்றவும் மாட்டார்கள். ஒரு இடத்திற்குத் தனியாகப் போக வேண்டும் என்றால் அதற்குத் தகுந்த பாதுகாப்போடும். துணிவோடும் தயாராக வேண்டும். இல்லையென்றால் முன்னேற முடியாது.

இக்கட்டான சூழல் வந்தால் நோ என்று சொல்லுங்கள். உங்களை மீறி எந்த தவறும் நடக்காது என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். இங்கே யாரும் யாருக்கும் உதவ மாட்டார்கள். பெண் பிள்ளைகளை வெளியே அனுப்பி விட்டுப் பெற்றோர்கள் பயந்து நடுங்குகிறார்கள். மீண்டும் பழைய நிலை வந்து பெண்களை வீட்டிற்குள் பூட்டி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது.

இதனை மாற்ற ஆண்கள் பெண்களுக்கு ஆதரவாக போர்க்குரல் கொடுக்க வேண்டும். அப்படி நடந்தால் பெண்களுக்கு நம்பிக்கை பிறந்து விடும். சரிநிகர் சமமான நிலை என்பது இதுதான என்றார் ரச்சிதா.

சூர்யா42 டைட்டில், ரிலீஸ் திகதி பற்றி வந்த அப்டேட்!

சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா 42 படம் மிக பிரம்மாண்ட பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வரலாற்று கதை கொண்ட படத்தில் சூர்யா பல கெட்டப்களில் நடித்து வருகிறார். அவருக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை திஷா பாட்னி நடித்து வருகிறார். சில வாரங்களுக்கு முன்பு தான் சூர்யா 42 டைட்டில் ப்ரோமோ ஷூட்டிங் நடந்து முடிந்தது. அதனால் அது எப்போது வரும் என ரசிகர்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது ஸ்டுடியோ க்ரீன் நிறுவனம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. **Suriya 42** படம் மொத்தம் 10 மொழிகளில் **3D** தொழில்நுட்பத்தில் வெளியாக இருக்கிறது என தெரிவித்து இருக்கின்றனர்.

சூர்யா 42 படத்தின் டைட்டில் மற்றும் ரிலீஸ் திகதி ஆகியவை வரும் ஏப்ரல் 16ம் திகதி காலை 9.05 மணிக்கு வெளியிடப்படும் எனவும் அறிவித்து இருக்கின்றனர். தற்போது சூர்யா ரசிகர்கள் இதனால் அதிகம் எதிர்ப்பார்ப்பில் காத்திருக்கின்றனர்.

மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?

இரணைமடு விமானதளம் பிரதானமாக இருக்கையில் ஏனைய சில இடங்களில் சிறு சிறு விமான ஓடுபாதைகள் விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டு வந்தது. குறைந்த தூரத்தில் பரப்பில் ஈடுபடவும் தாக்குதலின் போது அவசர தரையிரக்கங்களுக்காகவும் மற்றும் எதிரியை திசை திருப்புவதுக்காகவும் என திட்டமிடப்பட்டு விமான ஓடுபாதைகள் மேலும் சில இடங்களில் அமைக்கப்பட்டு இருந்தன. விடுதலைப்புலிகளின் விமான ஓடுதளம் என்பது தேவையான நீளத்திற்கு ஏற்றவகையில் நிலத்தினை பயன்படுத்திவிட்டு தார் போட்டுகொள்ளுவது தான் விமான தளமாக காணப்பட்டது. இதற்கமைவாக பூநகரி சுண்டிக்குளம், இருட்டுமடு, கொண்ட்டமடு, சுதுபுரம் என்பது உடையார்கட்டு காட்டுப்பகுதியில் உள்ளது. கொண்ட்டமடு என்பது புதுக்குடியிருப்பு அடுத்ததாக உள்ள மன்னாகண்டல் பகுதிக்கு அண்மையாக உள்ள இடம். சுதுபுரம் என்பது கோப்பபுளவு எனப்படும் இடத்தில் உள்ளது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் விமான தளங்கள் இரகசியமாக அமைக்கபட்டிருந்தன.

இதன்போது தான் ஒரு நாள் விடுதலைப்புலிகளின் முத்த தளபதிகளுக்கு புலிகளின் வான்படை அணியினை தலைவர் அறிமுகம் செய்து வைத்தார் (இதனை முதல் தொடரில் விரிவாக பார்த்திருந்தோம்) இதன் போது இரண்டு பேர் விகிதம் விமானத்தில் ஏறி விமானத்தை ஓட்டிக்காட்டி மக்களின் இடங்களையும் காண்பிக்கிறார். தலைவர் விமானப்படையின் பலம் தொடர்பாக தளபதிகள் அறிந்திருக்க வேண்டும் என்பதுக்கு அமைவாக இந்த அறிமுகம் நடைபெற்றது.

இந்த பறப்பிற்கு பின்னால்தான் அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களால் விடுதலைப்புலிகளிடம் விமானப்படை உள்ளதென்று அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது. இந்த அறிவிப்பு சிறிலங்கா அரசை ஆழ்ந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியது இது அயல் நாட்டை கூட வியக்க வைத்தது. விடுதலைப்புலிகளின் விமானப்படையினை முடக்க வேண்டும் என்ற எண்ணம் சிறிலங்கா அரசின் எண்ணத்தில் மட்டுமல்ல அயல்நாட்டிலும் உருவாகிறது.

சிறிலங்கா அரசின் புலனாய்வாளர்கள் பல தரைவழி தகவலை

சுழியோடி

15

திரட்டுகிறார்கள் அதாவது வன்னியில் இருந்து வவுனியா செல்லும் மக்களை விசாரித்து தகவல்களை புடுங்கி எடுக்கிறார்கள். இதன் போது விடுதலைப்புலிகளின் பயிற்சி தளங்கள் வெளிப்படையாகின்றது. வன்னியில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும் போது சிறிலங்கா அரசின் வேவு விமானம் வன்னி மண்ணை வேவு எடுக்கிறது. இதில் வாகன போக்குவரத்து பாதைகள் ஆள் நடமாட்டங்கள் போன்றவற்றை வைத்து சில இடங்களை இனம்கண்டு தரைவழி தகவல் ஊடாக விடுதலைப்புலிகளின் இடங்களை உறுதிப்படுத்துகின்றார்கள். இது ஒருபுறம் இருக்க சிங்கள அரசிடமிருந்து நியாயமான தீர்வு கிடைக்காது என்பதையும் போரையே அது மீண்டும் முன்னெடுக்கும் என்பதையும் தெரிந்திருந்த விடுதலைப்புலிகளின் தலைமை வரப்போகும் போரை எதிர்கொள்ளுவதற்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு இருந்தார்கள்.

இதற்கான தயார்ப்படுத்தல்கள் வன்னியில் பரவலாக நடைபெற்றது. மக்கள் படை உள்ளக பாதுகாப்பு படை எல்லை படை என மக்கள் கட்டுமானங்கள் கொண்டுவரப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு பயிற்சி நடைபெற்றது. இதில் ஒரு பகுதியாக ஊதியம் வழங்கப்பட்டு பணிசெய்யும் விடுதலைப்புலிகளின் தேசிய இராணுவ படையொன்றும் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த படையணியில் இளைஞர்கள் யுவதிகள் பலர் முன் வந்து இணைந்தார்கள். முதல் கட்டமாக யாழ் குடாநாட்டில் இருந்து ஒருசில இளைஞர்கள் பயிற்சிக்காக பளைக்கு எடுக்கப்பட்டு சூட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு சென்று இளைஞர்களை திரட்டும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

அதாவது குடாநாட்டை எதிரிகளிடம் இருந்து மீட்டு எடுக்க அங்குள்ள இளைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்கு ஒருசில இடங்களிலிருந்து முச்சக்கர வண்டி சாரதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என விடுதலை உணர்வுள்ளவர்களை கட்டம் கட்டமாக பளைக்கு அழைத்து சில முக்கியத்தவர்கள் கதைத்து பயிற்சி கொடுக்கப்படுகிறது. பளையில் உள்ள எரிமலை என்னும் பயிற்சி தளத்தில் ஜி (12) என்னும் பயிற்சி தளத்திலும் சுட்டுபயிற்சி அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் வன்னி மக்கள் மத்தியிலும் கதை பரவலாக அடிபடுகிறது. விடுதலைப்புலிகள் வழிந்த தாக்குதலை செய்யப்போகிறார்கள். முதல் யாழ்ப்பாணத்தை தான் பிடிப்பார்கள் யாழ்ப்பாணம் பிடித்தால் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளின் கால்களில் விழுந்து விடும் என்றெல்லாம் பல கதைகள் மக்கள் மத்தியில் உருவாகிறது. இவற்றை எல்லாம் இராணுவ புலனாய்வாளர்கள் அறிகிறார்கள்.

அன்று யாழ் மாவட்ட இராணுவ பொறுப்பாளராக இருந்த ஜி எ சந்திரசிறி இத்தகவலை அறிந்து தனது தலைமைக்கு தெரியபடுத்தி இதனூடாக கிளாலி தொடக்கம் நாவுருகொவில் வரையான படை முன்னணி அரண்கள் பலப்படுத்துகிறார்கள். பாகிஸ்தான் நாட்டு இராணுவ அதிகாரிகள் இந்த முன்னணி காவல் அரண்களை பார்த்து ஆலோசனைகள் வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண முன்னணி காவலரண்களில் உள்ள படையினர் உசார் படுத்தப்பட்டு இரகசியமான சில படை செயற்பாடுகளில் சிறிலங்கா படையினர் ஈடுபடுகிறார்கள். ஏராளமான எறிகணைகள் யாழ் குடாநாட்டில் குவிக்கப்படுகிறது. மேலதிக படையினர் குவிக்கப்படுகிறார்கள்.

கவச வாகனங்கள் களமுனையில் நகர்த்தப்படுகின்றன இவ்வாறு படை நகர்த்தல்களை சிறிலங்கா படையினர் இரகசியமாக மேற்கொள்கிறார்கள். இவ்வாறு இருக்கையில் (2006) ஆண்டு (08) ம் மாதம் (11) திகதி மாலை (5) மணியளவில் ஏ (9) வீதி முகமாலை பாதையில் விடுதலைப்புலிகள் வழிந்த தாக்குதலை தொடுக்கிறார்கள். விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல் ஊடாக வன்னி களமுனை போர்கால முனையாக மாறுகிறது. இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் சிறிலங்கா படையினரின் காவலரண்களை தகர்த்து அழித்து சென்றாலும் இரண்டாம் நிலையான காவலரண்களை தாண்டி செல்ல முடியவில்லை. சிறிலங்கா படையினர் பின்வாங்கி தமது நிலைகளை இலக்குவைத்து கடுமையாக தாக்குகிறார்கள்.

இதனால் பிடித்த நிலைகளில் நிலை கொள்ள முடியாத அளவிற்கு கடும் எதிர்பை விடுதலைப்புலிகள் எதிர்கொள்ளுகிறார்கள். இதனால் அன்றைய தாக்குதல்கள் இடை நிறுத்தப்படுகிறது. இதனால் வன்னிக்கும் யாழ் குடாவிற்குமான தரைவழி பாதையை சிறிலங்கா மூடுகிறது வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றவர்கள் யாழ்ப்பாணத்திலும் யாழில் இருந்து வன்னி சென்றவர்கள் வன்னியிலும் முடக்கப்படுகிறார்கள்.

உறவுகளை பிரிந்து வாழும் மக்கள் வன்னியில் இருந்து வெளியேற முடியாத சூழல் காணப்படுகிறது. இந்த நிலையில் மன்னார் உயிலங்குளம் சோதனை சாவடி வவுனியா ஓமந்தை சோதனை சாவடி ஊடாகவும் சென்ற அதே வேளை ஒருசில இளைஞர்கள் காட்டு வழியாக மன்னார் சென்று படையினரின் கட்டுப்பாட்டுக்கும் கடல்வழியாக படகில் யாழ்ப்பாணம் சென்றடைகிறார்கள். இவ்வாறு இருக்கையில் மன்னார் உயிலங்குளம் சோதனை நிலையத்தில் இறுக்கமான கட்டுப்பாடுகளை படையினர் மேற்கொள்கிறார்கள்.

ஓமந்தை சோதனை நிலையத்தில் சிறிலங்கா படையினர் பொருட்களுக்கு கட்டுப்பட்டு தடை விதிக்கிறார்கள். உயிலங்குளம் பாதை கண்காணிப்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை குழு வெளியேறுகிறது. இதன்போது விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்கும் துப்பாக்கி முனையில் தொடங்கிய தாக்குதல் கடுமையான தாக்குதலாக மாறுகிறது

தொடரும்...

தமிழினப் படுகொலையில் பங்கேற்ற நாடுகள் தீர்வு என்ன?

கடந்தவார தொடர்ச்சி...

பாக்கிஸ்தான்:

200 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான இராணுவ உதவிகளையும். ஆயுதங்களையும். துப்பாக்கிகளையும். ராக்கெட் குண்டுகளையும். கண்ணி வெடிகளையும். தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களையும். உளவுத் தகவல்களையும். போர் விமானங்களையும். தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் ஹெலிகாப்டர்களையும் வழங்கியது. ஜூன் 1999 - டிசெம்பர் 2007 கால கட்டத்தில் பாக்கிஸ்தானிடம் இருந்து 50 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான போர் கருவிகளை இலங்கை வாங்கியுள்ளது. 2009 இல் இது 150 மில்லியன் டாலராக உயர்ந்தது. பாக்கிஸ்தானின் **ISI**யிடம் பயிற்சி பெற்ற இஸ்ஸாமிய பாதுகாப்பு படையினர் **(home-guards)** விடுதலைப் புலிகளின் கிழக்கிலும். மேற்கில் சில பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பற்றி உளவுத் தகவல்களை சேகரித்து இலங்கை அரசுக்கு கொடுப்பதில் முக்கியப் பங்காற்றினர். இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் (இந்து மற்றும் கிறிஸ்தவர்கள்) இடையே பிளவுகள் ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றினர். பாக்கிஸ்தானின் விமானப்படைத் துணைத் தளபதி **(Vice-Marshal)** ஷெஹ்சாத் அஸ்லாம் சௌதிரி இலங்கைக்கான ஆணையராக நியமிக்கப்பட்டார். அவரின் நியமனத்திற்குப் பிறகு 15 - 17 அனுபவமுள்ள இராணுவ விமானப்படை வீரர்கள் பாக்கிஸ்தானில் இருந்து வரவழைக்கப்பட்டு. இலங்கை விமானப்படை வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு ஆகிய பகுதிகள் மீதான தாக்குதலிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

மே 2008 இல். இலங்கை தளபதியாக இருந்த சரத் ஃபொன்சேகா. பாக்கிஸ்தான் இராணுவத்துடன் இராணுவ தளபாடங்கள் வாங்குவது தொடர்பான பேச்சு வார்த்தையின் ஈடுபட்டார். 22 **Al-Khalid MBT** பீரங்கிகளை 100 மில்லியன் டாலருக்கும் அதிகமாக கொடுத்து இலங்கை அரசு வாங்கியது. 20 மில்லியன் டாலர் மதிப்பிலான 1.50.000 **60mm** பீரங்கி குண்டுகள். 1.50.000 கை எறி குண்டுகள் ஆகியவற்றையும் பாக்கிஸ்தான் அரசு வழங்கியது. 25 மில்லியன் டாலர் பெருமானமுள்ள **81 mm. 120 mm** மற்றும் **130 mm** மோர்டர் குண்டுகளை ஒரே மாதத்திற்கு தருமாறு இலங்கை அரசு பாக்கிஸ்தான் அரசிடம் ஏப்ரல் 2009 இல் கேட்டுக் கொண்டது.

அமெரிக்கா:

அமைதி ஒப்பந்தத்தை முறிப்பதிலும். இலங்கைக்கு இராணுவ உதவிகளை அளிப்பதிலும் அமெரிக்க அரசு முதன்மை பங்காற்றியது. 500 மில்லியன் டாலர் பெருமானமுள்ள இராணுவ உதவிகளை அளித்தது அமெரிக்கா. இராணுவ தளவாடங்கள் வாங்குவதைத் தாண்டி. இராணுவ பயிற்சிகளும் அமெரிக்காவால் அளிக்கப்பட்டது. 2002 இல் ரணில் விக்கிரமசிங்கே ஆட்சி காலத்தில் இராணுவப் பயிற்சிகள். இராணுவத் தொழில்நுட்பங்கள். உளவுத் தகவல்கள். மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான சிறப்பு இராணுவப் பயிற்சி ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையே கையெழுத்தானது. அமைதி காலத்தின் போது. அமெரிக்காவின் பசுபிக் பெருங்கடல் படை தளத்திலிருந்து 2002 செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 24 வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு. இலங்கையின் கப்பல் படை. விமானப் படை. இராணுவம் ஆகியவற்றிற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இலங்கை இராணுவங்களின் பலவீனங்களை கண்டறிந்த அமெரிக்கா. கொத்து வெடிகுண்டுகளை பயன்படுத்தப்பரிந்துரைத்தது. 2010 ஆம் ஆண்டு வரை கொத்து வெடிகுண்டுகள் பயன்பாடு உலக அளவில் தடை செய்யப்படவில்லை. அது மட்டுமில்லாமல் கிஃபிர் மற்றும் **MI-24** போர் விமானங்களில். வழிகாட்டுதலின் படி இலக்கை தேடி அழிக்கும் ராக்கெட் குண்டுகளைப் பயன்படுத்தவும் பரிந்துரைத்தது.அமெரிக்கா தானமாக கொடுத்த "சமுத்ரா" என்ற போர் கப்பலைக் கொண்டே. கடல் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணித்தது இலங்கை அரசு. மேலும் தரையிலும் வேவு பார்ப்பதற்கான விமானங்களை இலங்கை அரசிற்கு அளித்தது. வன்னிக் காடுகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை இதை வைத்து இலங்கை அரசு அறிந்தது. இது வரையிலான காலத்தில். இலங்கை அரசிடம் இத்தகைய கருவிகள் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2006 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரை மீண்டும் தொடங்க ஊக்குவித்த அமெரிக்க அரசு. ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவிகள் புரிந்தது. அமெரிக்கா மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் அளித்த உதவிகள் காரணமாகவே இலங்கை இராணுவம் பலம் பொருந்திய ஒரு இராணுவமாக உருவெடுத்தது என்று கூட சொல்லலாம். கிளர்சியாளர்களுக்கு எதிரான போர் முறைகளில் பயிற்சி மற்றும் உளவுத் தகவல்களை இலங்கைக்கு அளித்ததை அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. கடற்பகுதிகளை கண்காணிக்க பயன்படும் ராடர் கருவிகளை அமெரிக்கா கொடுத்தது. இதைக் கொண்டே இந்தியாவில் இருந்து ஈழத்திற்கு சரக்குகள் ஏற்றிச் செல்லப்பயன்படுத்தப்பட்ட பாதை முடக்கப்பட்டது. அமெரிக்காவிற்கு நெருக்கமாக இருக்கும் இஸ்ரேல் மற்றும் பாக்கிஸ்தான் அரசுகள். இலங்கையின் இராணுவ தளபாட கட்டமைப்பிற்கு வலு சேர்த்தது. அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாகவே கனடாவும். ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது. ஆயிரக்கணக்கான புலம் பெயர் ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு அளித்து வந்த நிதி உதவி இதன் மூலம் தடைபட்டுப்போனது. மகிந்த ராஜபக்சே தேர்தலில் வெற்றி பெற்ற இரண்டு வாரங்கள் கழித்து. அமெரிக்க தூதுவர் ஜெஃப்ரி லுன்ஸ்டெட் விடுதலைப்புலிகளை இலங்கை அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்றும். அப்படி இல்லை என்றால். பலம் வாய்ந்த இலங்கை இராணுவத்தை எதிர் கொள்ள நேரிடும் என்று எச்சரித்தார். மேலும் "எங்களின் இராணுவப் பயிற்சிகள் மூலமும். தீவிரவாதத்திற்கு எதிரான ஆதரவு நடவடிக்கைகள் மூலமும். இலங்கை அரசாங்கம் தன் மக்களை காப்பதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்க உதவியிருக்கிறோம். இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கவில்லை" என்றும் கூறினார்.

அமெரிக்காவின் கப்பற்படை இலங்கை அரசாங்கத்திற்குத் தேவையான உளவுத் தகவல்களை கொடுத்தது. இதை வைத்து கடற் புலிகளை வேட்டையாடியது இலங்கை கப்பற் படை. விடுதலைப் புலிகளின் நான்கு கலன்களும் இந்த தகவல் கொண்டு அழிக்கப்பட்டன. இராஜபக்சே இதை பின்நாட்களில் உறுதி செய்தார். கடற்புலிகளின் கப்பல்களை அமெரிக்கா தன்னுடைய தானியங்கி போர் விமானங்கள் கொண்டு அழித்தது. மேலும் தன்னுடைய செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தும் உரிமையையும் இலங்கை இராணுவத்திற்கு அளித்தது. இதைப் பயன்படுத்தி. இலங்கை அரசு வன்னிக் காட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணித்ததுடன். இந்தியப் பெருங்கடலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்முதலையும் தடுத்தது. போரில் வெற்றி பெற்ற உடன் இராஜபக்சே ஆற்றிய உரையில்: "ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதிலும். புலிகளின் ஆயுதக் கொள்முதலை தடுப்பதிலும் அமெரிக்க அரசாங்கமே உதவியதாக" தெரிவித்தார். அமெரிக்காவின் நிலைப்பாடு. ஒபாமா ஜனவரி 2009 இல் அதிபர் ஆன பிறகு மாறியது. சிங்கள அறிவு ஜீவி ஜுட் லால் ஃபெர்னாண்டோ அமெரிக்க-பிரித்தானிய கூட்டணி நாடுகளே 2009 தமிழீழ இனப்படுகொலைக்கு முக்கிய காரணம் என்று கூறுகிறார். "அமைதிப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றிருக்குமேயானால் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். அரசியல் ரீதியான 2009 அழிவிற்கு அமெரிக்காவும் ஒரு காரணம். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் வழங்கும் பொருட்டு தமிழர்களுக்கும். சிங்களவர்களும் சேர்த்து ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது **(Post-Tsunami Operational Management Structure).** இலங்கைத் தீவில் இருந்த அனைவருமே சுனாமியால் சமமான அளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். அமைதிப் பேச்சுவார்த்தையில் அங்கமாக இருந்த அமெரிக்க அரசு. தீவிர வலதுசாரிகளுடன் கூட்டு சேர்ந்துக் கொண்டு இதற்கு எதிரிப்புத் தெரிவித்தது. இதைத் தொடர்ந்தே ஜாதிக ஹேல உருமையா. மற்றும் ஜனதா விமுக்தி பெருமானா ஆகிய கட்சிகள் இந்த கட்டமைப்புக்கு எதிராக இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. அமைதிப் பேச்சு வார்த்தை தோல்வி அடைவதிற்கு முக்கிய காரணமாக அமெரிக்கா இருந்தது. 2005இல் அமெரிக்க இராணுவ அதிகாரிகள். இலங்கையின் பாதுகாப்புத் துறை செயலாளருக்கு ஒரு கடிதத்தை அளித்தனர். அதில் திருகோணமலை தளத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அமைதிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த ஒரு அரசாங்கம். சிங்கள தமிழ் தலைமைகள் இருவருமே போருக்கு தயாராக இல்லாத நிலையில். சிவில் சமூக ஆர்வலர்கள் அனைவரும் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் தான் இப்படி ஒரு செயலை அமெரிக்க அரசு செய்தது. அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த ஹிலாரி கிளின்டன் மே 4. 2009 அன்று அனுப்பிய ஒரு மின் அஞ்சலில் இவ்வாறு எழுதியுள்ளார்: " **IMF** (சர்வதேச நிதியம்) நடத்திய கூட்டம் ஒன்றில் நான் கிரித்னருடன் இருந்தேன். அதில் நீங்கள் **IMF** இலங்கை அரசிற்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று உங்கள் வரம்புகளை மீறி கூறியதாக தெரிவிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்றே கருதுகிறார்கள். அந்த போரில் பொதுமக்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டால் கூட அது ஏற்றுக் கொள்ளக் கூடியது தான் என்பது என் கருத்து"

இஸ்ரேல்:

இலங்கை அரசாங்கத்திற்கு எல்லா காலங்களிலும் இஸ்ரேல் இராணுவ உதவிகளை செய்து வந்துள்ளது. 1980களில். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்குப் பகுதிகளில் சிங்கள இராணுவக் குடியிருப்புகளை உருவாக்குவதற்கு உதவி செய்தது. -இராணுவ உதவிகளுடன் சேர்த்து இராணுவ உத்திகளில் ஆலோசனையையும் வழங்கியது. அமெரிக்காவின் அனுமதியுடன் கிஃபிர் போர் விமானங்கள். மற்றும் ஆளில்லா விமானங்களையும் இலங்கைக்கு அளித்தது. போர் காலம் முழுவதிலும். இஸ்ரேலின் "ஷாயிடெட் 13" கமாண்டோ பிரிவினர் இலங்கை இராணுவத்திற்கு தொடர்ந்து பயிற்சிகளை அளித்து வந்தது. பல மில்லியன் டாலர் பெருமானமுள்ள இராணுவ உதவிகளை இலங்கை அரசுக்கு அளித்ததுடன். இலங்கை விமானப்படைக்கு ஏழு **IAI** முகசை விமானங்களை கொடுத்தது. **Super Dvora MK II** ரக கண்காணிப்பு படகுகளையும். தாக்குதலுக்கு பயன்படும் **Dvora** மற்றும் **Shaldag** ரக படகுகளையும் கொடுத்தது இஸ்ரேலிய அரசு. இலங்கை கப்பற் படையின் ஒரு முக்கிய அங்கமாக இன்றளவும் இவை திகழ்கின்றன. இஸ்ரேலின் கிஃபிர் போர் விமானங்களையும் ஃப்ரான்ஸின் **Mirage** போர் விமானங்களையும் கொண்டு மட்டும் 1996இல் இலங்கை போர்படையின் **Squadron** 10 பிரிவு உருவாக்கப்பட்டது. இந்த பிரிவில் உள்ளவர்கள் இஸ்ரேலுக்கு சென்று பயிற்சிகள் எடுத்து வந்தனர். தரைப் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயன்படும் ஆஜபு-29 விமானங்கள் பலவற்றை இலங்கை அரசாங்கம் வாங்கியது. 2006 ஆம் ஆண்டு. இஸ்ரேல் அரசாங்கம் **Blue Horizon UAV** எனும் கண்காணிக்கும் இயந்திரத்தை இலங்கைக்கு அளித்தது. இதைக் கொண்டு கடல் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை அரசால் துல்லியமாக கண்காணிக்க முடிந்தது. 2006-09 கால கட்டத்தில் மட்டும் 1300 நடவடிக்கைகளை கடற்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் இந்த இயந்திரத்தைக் கொண்டு நடத்தியது. **Blue Horizon UAV** இயந்திரத்தைக் கொண்டு. 24 மணி நேரமும். எந்த ஒரு வானிலையிலும். இரவும் பகலும் கடற் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை அரசால் கண்காணிக்க முடிந்தது. கடற்புலிகள் **Swarm Tactic** என்ற போர் யுக்தியை பயன்படுத்தி வந்தனர். ஒரு இலக்கை பலர் எல்லா திசைகளில் இருந்து தாக்குவது தான் அந்த யுக்தி. இஸ்ரேல் கொடுத்த **Dvora** மற்றும் **Shaldag** ரக போர்ப் படகுகளையும். **Blue Horizon UAV** கண்காணிப்பு வசதியையும் கொண்டே இந்த யுக்தியை இலங்கை அரசால் வெல்ல முடிந்தது. இஸ்ரேல் தனது ஏவுகணை பரிசோதனைகளை இலங்கை கடற் பரப்பில் இருந்தே செய்து வருகிறது.

ஈரான்:

விடுதலைப் புலிகளின் கரும்புலிப் படை இலங்கையின் அனுராதபுர இராணுவ விமான தளத்தை தாக்கி 20 போர் விமானங்களை அழித்தது. சுமார் 40 மில்லியன் டாலர் அளவிலான இழப்பு இலங்கை அரசிற்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஆளில்லா விமானங்களையும். கண்காணிப்பு கருவிகளையும் வாங்குவதற்கு ஈரான் அரசாங்கத்திடம் குறைந்த வட்டியில் கடன் கேட்டது சிங்கள அரசு. இலங்கையின் கோரிக்கையை ஏற்ற ஈரான் அரசு. ரகசியமாக தேவையான நிதியை வழங்கியதுடன். தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை அதிகாரிகள் சிலரை பயிற்சிக்காக அழைத்தது. ஈரான் அரசின் "கிழக்கை நோக்கி" **(Look East)** என்ற திட்டத்தின் ஒரு அங்கமாகவே இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை மும்முரமாக ஈரான் அரசு வழங்கியது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 1.05 பில்லியன் டாலர் மதிப்பிலான கச்சா எண்ணெயை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியது. 2007 இல் மட்டும். 140.9 மில்லியன் டாலர் மதிப்பிலான இராணுவ ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டது. ஆயுதங்களையும். வெடி குண்டுகளையும் கொடுத்ததுடன். தன்னுடைய இராணுவ தளவாடங்களை மாதக் கணக்கில் இலவசமாக பயன்படுத்தும் உரிமையை இலங்கை அரசுக்கு அளித்தது. ஈரானின் உதவிகளைப் பற்றி இலங்கையின் அமைச்சர் விமர் வீரவம்சா கூறும் போது "பிற நாடுகள் எங்களை கைவிட்ட போதிலும் கூட. ஈரான் அரசு எங்களை என்றுமே கைவிட்டதில்லை. இலங்கை நாடே ஈரானுக்கு நன்றிக் கடமைப்பட்டுள்ளது" **"The Island"** பத்திரிக்கை ஈரானுக்கும் இலங்கைக்குமான உறவை பற்றி எழுதும் போது: "யாழ்பாணத்தில் நடைபெற்ற யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தை தோற்கடிக்கும் தருவாயில் இலங்கை இராணுவத்திற்கு ஈரான் உதவிகள் செய்தது. இலங்கை அரசு உதவி கோரிய உடனேயே ஈரானின் இராணுவ தளவாடங்கள் பல விமானங்கள் மூலம் இலங்கைக்கு கொண்டு வரபட்டது"என்றும் "ஈரானும் இலங்கையும் சேர்ந்து சிறு படகுகள் மூலம் தாக்குதலை நடத்துவதற்கான பல வியூகங்களை வகுத்தன" என்று கூறுகிறது.

பிரித்தானிய அரசாங்கம்:

1980 களில் இருந்தே இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானிய அரசு இராணுவ பயிற்சிகளை அளித்து வந்துள்ளது. இலங்கை இராணுவத்தின் சிறப்பு படைப் பிரிவுகளான **STF** மற்றும் **LRRP** ஆகியவை பிரித்தானிய சிறப்பு விமானப் படை அதிகாரிகளே தொடங்கினர். அதிநவீன தொழில்நுட்பங்களை கொண்ட இராணுவ தளவாடங்களை 2009 வரை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. 2001 ஆம் ஆண்டு. விடுதலைப் புலிகளை தீவிரவாத இயக்கமாக அறிவித்த பிரித்தானிய அரசு. அதற்கான எந்த நியாயமான காரணங்களையும் கூறவில்லை. பிரித்தானியாவில் வாழும் 3.00.000 ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதிப் பங்களிப்பதையும் தடுத்தது. நான்காம் ஈழப் போரில் விடுதலைப் புலிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதிற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். விடுதலைப் புலிகள் தீவிரவாத இயக்கமாக இலங்கை அரசாங்கமே கூட அறிவிக்காத காலகட்டத்தில். இலங்கை அரசை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்த நிலையில். **11/9** தாக்குதல் அமெரிக்காவில் நடைபெறுவதற்கு முன்பே இப்படி ஒரு தடையை பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. பண்டாரநாயகே சர்வதேச விமான தளத்தின் மீது விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குதல் நடத்தியதால் இலங்கை அரசு 358 மில்லியன் டாலர்களை இழந்தது. இதனால் இலங்கைக்கான சுற்றுலா வரத்தும் குறைந்தது. இந்த தாக்கதலுக்கு பிறகு. இலங்கை அரசாங்கத்திற்கு நிதி உதவி செய்ததில் முக்கிய பங்காற்றியது பிரித்தானிய அரசு.

பிரித்தானிய. அமெரிக்கா மற்றும் இந்திய அரசுகளின் அழுத்தத்தின் காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது. அமைதி காலத்தில் அமைக்கப்பட்ட **"Sri Lanka Monitoring Mission"** அமைப்பின் தலைவராக இருந்த ஸ்வீடனின் இராணுவ தளபதி மேஜர். உல்ஃப் ஹென்ரிக்சன். பிரித்தானிய மற்றும் அமெரிக்க அரசுகள் அமைதிப் பேச்சுவார்த்தையை குலைப்பதாகவும். பிற நாடுகளை விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்ய வற்புறுத்துவதாகவும் குற்றம் சாட்டினார். 2008 இல் மட்டும். இலங்கைக்கும் 4 மில்லியயூரோ பெருமானமுள்ள இராணுவ தளவாடங்களையும் 3 மில்லியன் யூரோ அளவிலான ஆயுதங்களையும் பிரித்தானிய அரசு இலங்கைக்கு விற்றது. பல ரகத் துப்பாக்கிகள் உட்பட இராணுவம் பயன்படுத்தும் ஆயுதங்கள் 3.30.000 யூரோக்களுக்கும். பாதுகாப்பு கவசங்கள் 6.55.000 யூரோக்களுக்கும் இலங்கைக்கு விற்கப்பட்டது. 2006-2009 கால கட்டத்தில் மட்டும் 12 மில்லியன் யூரோக்கள் பெருமானமுள்ள ஆயுதங்களை பிரித்தானிய அரசு இலங்கைக்கு ஏற்றுமதி செய்தது.

தொடரும்...

இரணியன்

மகளிர் பக்கம்

முகத்தை பளபளப்பாக்கும் ரோஸ் ஸ்கிரப்

நமது சருமத்தை சுத்தமாகவும், அழகாகவும் காட்டுவதற்கு நாம் பல வகையான பொருட்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால் கடைகளில் கிடைக்கும் தயாரிப்புகளும் நமது சருமத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. சருமத்தை அழகாக பராமரிக்க, இன்று ரோஜா பூவால் செய்யப்பட்ட ஒரு ஸ்க்ரப் பற்றி பார்க்கவிருக்கிறோம். இது உங்கள் சருமத்தில் உள்ள அழுக்குகளை நீக்கி நல்ல பளபளப்பைக் கொடுக்கும். இதனை எப்படி செய்வது என்று பார்ப்போம்.

ரோஜா பூ - 1 கப்(உலர்ந்தது) பொடித்த சர்க்கரை- 1 டீஸ்பூன் தேன் - 2 டீஸ்பூன் ரோஸ் வாட்டர் - 3 டீஸ்பூன் தண்ணீர் - 1 டீஸ்பூன்

முதலில் உலர்ந்த ரோஜா இதழ்களை மிக்ஸியில் அரைக்கவும். ஒரு பாத்திரத்தில் பொடித்த ரோஜா, பொடித்த சர்க்கரை, தேன், ரோஸ் வாட்டர் மற்றும் தண்ணீர் ஆகியவற்றைப் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். இந்த ஸ்க்ரப்பை உங்கள் முகத்தில் நன்றாக தேய்த்து பின் முகத்தில் 10 நிமிடம் விடவும். 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவவும். உங்கள் முகம் அழகிய பூ போல மலந்திருப்பதை பார்க்க முடியும். ரோஸ் வாட்டர் அனைத்து சரும வகைகளுக்கும் நன்மை பயக்கும். இது நமது சருமத்தை ஈரப்பதமாக்குகிறது. பருக்களைக் குறைக்கிறது. வீக்கத்தைக் குறைக்கிறது. சுருக்கங்களைக் குறைக்கிறது மற்றும் கண்களுக்குக் கீழே உள்ள கருவளையத்தையும் குறைக்கிறது. தினமும் இரவில் தூங்கும் முன் ரோஸ் வாட்டரைப் பயன்படுத்தினால், அது உங்கள் சருமத்திற்குப் புதிய பொலிவைத் தரும்.

எலுமிச்சை தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

எலுமிச்சை என்பதால் பெரும்பாலனோர் கருதுவது புளிப்பு தன்மையை. ஆனால் இதனால் பல வகையான நன்மை உண்டு. பல நோய்களை தீர்க்கும் சக்திக் கொண்டுள்ளது. எலுமிச்சையில் விட்டமின் சி நிறைந்துள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. எலுமிச்சையில் உடலில் இருக்கும் தீய கொழுப்புக்களை அழிக்கும் சக்தி உண்டு.

எலுமிச்சை நீரை குடிப்பதால் உடல் எடையை குறைக்கலாம். சிறுநீரகத்தில் கற்கள் உருவாக்குவதை தடுக்க உதவுகிறது. சருமத்தை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும். ஜீரண மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. நெஞ்சு எரிச்சலை தடுக்கும். இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. இரத்தத்தை சுத்தமாக வைத்திருக்கும். காயங்களை குணப்படுத்தும். சளி குணமாகும். கண் பிரச்சினையை குணமாக்கும்.

செய்யும் முறை : எலுமிச்சையை சிறுதாக வெட்டி அதனுடன் 1கப் தண்ணீர் சேர்த்து குடிக்க வேண்டும். இவ்வாறு பல நன்மைக் கொண்ட இந்த தண்ணீரை குடிப்பது சிறந்த ஒரு பழக்கமாகும். தினமும் காலையில் இதனைக் குடிக்க வேண்டும். இது உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெயில் கால கூந்தல் பராமரிப்புக்கு உதவும் கற்றாழை!

சோற்றுக் கற்றாழை, சிறுகத்தாளை, குமாரி, கன்னி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. கற்றாழையானது நமக்கு இயற்கையாகவே முடி வளர்ச்சியை சீர்ப்படுத்த உதவுகிறது.

கற்றாழையில் உள்ள புரோட்டியோலிடிக் என்சைம்கள் எனப்படும் சிறப்பு நொதியம் காரணமாக கற்றாழை ஆரோக்கியமான முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இந்த நொதியங்கள் மயிர்க்கால்களை அடைக்கக்கூடிய உச்சந்தலையில் உள்ள இறந்த சரும செல்களை திறம்பட உடைக்கிறது.

மயிர்க்கால்களில் அதிகப்படியான சருமம், அழுக்கு அல்லது இறந்த சருமம் இருந்தால், அவை சரியாக வளர ஊக்குவிக்கிறது. இது கூந்தலை ஈரப்பதத்தோடு வைப்பது மட்டுமல்லாது தலையில் ஏற்படும் பூஞ்சைகளில் இருந்தும் தொற்றுக்கிருமிகளிலிருந்தும் காக்கின்றது. கற்றாழை முடியின் வேர்க்கால்களை வலுப்படுத்துகிறது. தலைமுடி பராமரிப்பில் முடிகளை கறுப்பாக்கவும், முடி வளர்ச்சியைத் தூண்டவும் பயன்படுகிறது. தலையில் ஏற்படும் பேன் மற்றும் பொடுகு பிரச்சனைகளையும் கற்றாழை நீக்குகிறது.

கற்றாழையிள்ள சத்துக்கள்

கற்றாழையில் கால்சியம், குளோரின், சோடியம், பொட்டாசியம், மாங்கனீசு, விட்டமின் பி1, விட்டமின் பி2, பாலிசாக்கரைடுகள் மற்றும் யூரிக் அமிலம் உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்துள்ளது. கற்றாழையிலிருந்து எடுக்கப்படும் "ஜெல்" சருமத்தின் ஈரத்தன்மையை (**Moisture**) பாதுகாக்க பயன்படுகிறது.

கற்றாழையில் விட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ போன்றவை உள்ளன. இந்த மூன்று விட்டமின்களும் செல் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன. ஆரோக்கியமான செல் வளர்ச்சி மற்றும் பளபளப்பான முடி வளர்ச்சிக்கான ஊக்குவிப்பை இவை வழங்குகின்றன. விட்டமின் பி12 மற்றும் ஃபோலிக் அமிலம் கற்றாழை ஜெல்லில் உள்ளது. இந்த இரண்டு கூறுகளும் உங்கள் முடி உதிர்வதைத் தடுக்கும்.

மூலிகைத் தோட்டமும் உள சுகவாழ்வும்

டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.
அரச பதிவு இலக்கம் - 10,294
மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி, தெல்லிப்பளை.

மூலிகைகள் உணவாகவும், மருந்தாகவும், நோய் வராமல் தடுக்கும் உயிர்ப்பு நிறைந்த உயிர் காக்கும் மருந்துகளாகவும் பயணிக்கின்றன. மூலிகைகள் நோய் எதிர்ப்புச்சக்தி மேம்பாடு (**Boost Immunity**) அடையச் செய்வதுடன், பல உடல் உள நோய்களுக்கு மருந்தாகவும், உடல் உள நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் மருந்தாகவும் திகழ்கின்றன.

மூலிகைத் தோட்டங்கள் இயற்கைச்சூழலையும் (**Natural Environment**), உணவில் பல்வேறு தன்மை யைக் (**Variety in the diet**) கொடுத்து உடலுக்கு ஊட்டச்சத்தைக் கொடுப்பதுடன், புதிய சுகவாழ்வு தரும் காய்கறிகளை (**Fresh and healthy Vegetables**) என்று பல்வேறு பயன்களைத் (**Multiple benefits**) தருவதாக அமைகின்றன. மூலிகைத்தோட்டங்களில் சிறு பிள்ளைகள் உள சுகவாழ்வை (**Mental Health**) பெறுகின்றனர். சிறார்கள் மூலிகைகளை வளர்க்கும் போது அவர்களிடத்தில் பொறுப்புணர்வு (**Sense of responsib ility**) வளர்வதைக் காணலாம். பிள்ளைகள் அழகான பூக்களைப் (**Colourful Flowers**) பார்க்கும் போது அவர் களது உள்ளம் மகிழ்ச்சியால் பூரிப்படைகின்றன. அழகான சூழல் மக்களை மகிழ்ச்சியடையச் செய்கின்றது. சிறுவர்களும் முதியோர்களும் ஓய் வாக (**Relax in the garden**) இருந்து மன இறுக்கத்தைக் குறைக்க உதவுவதுடன் மன அழுத்தத்தைக் (**Stress**) குறைப்பதுடன், எதிர்மறை எண்ணங்களை, உணர்வுகளைக் (**Negative thoughts and feeling**) குறைப்பதுடன், மன நிலை மேம்பாடு (**Improves the mood**), பிள்ளைகளின் குவியப்படுத்தலையும், கவனத்தையும் (**Focus and Concentration**) சீர்ப்படுத்துவதுடன், உள ரீதியான திருப்தியையும் (**Mental Satisfaction**) வழங்குவதோடு, மனநிலை மேம்பாட்டையும் சுய திறனடைவையும் **Mood and self-esteem**) வலுப்படுத்துவதாகவும், பல் வேறு உணர்வுரீதியான பயன்களையும் (**Array of emotional benefits**) வழங்குவதாகவும் பல்வேறு அதீத உடல், உள ரீதியான பயன்களைக் (**Immense mental and physical benefits**) கொண்டதாகவும் காணப்படுகின்றன. மூலிகைத் தோட்டங்களில் மலர்கள் மலரும் போது மகிழ்ச்சி ஓமோன்கள் தூண்டப்பட்டு உள மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. பயபதற்றம் (**Anxi ety**), மனமடிவு நிலை (**depression**) ஆகியவற்றைக்குறைப்பதுடன், முதியோரில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு நிலையைத் தடுப்பதுடன் (**Prevent dementia**), மூலிகைகளை நடுதல், களைகளைப் பிடுங்குதல், கொத்துதல், நீர் இறைத்தல் போன்றன உடற்பயிற்சிகளாக அமைந்து நோய் எதிர்ப்பு மேம் பாட்டை அதிகரிக்கச் செய்கின்றன. மூலிகைத் தோட்டமானது சிறுவர்களின் அறிகைத் தொழிற்பாட்டை (**cognitive function**) சீர்ப்படுத்துகின்றது. மூலிகைத் தோட்டங்களைப் பயன்படுத்தி உயிரியல், விஞ்ஞானம், தாவரவியல், விவசாயம், மனைப்பொருளியல், சுகாதாரம், சித்திரம் போன்ற பல பாடங்களைக் கற்பிப்பதோடு புதிய பல திறன்களை வளர்ப்பதற்கு (**To develop new skills**). மூலிகைத் தோட்டங்களில் வைத்து வீட்டுப் பிள்ளைகளுக்கு கதைகளைக் கூறுவதனால் கற்பனையாற்றலை (**Imagination and collective social Imagination**) வீட்டுப்பிள்ளைகளில் வளப்படுத்தி உன்னதபடைப்பாற்றலை, புத்தாக்கத்தை (**Highly creative and innovative**) மலர்ச்சியடையச் செய்து சிறார்களை மலரும் எழுத்தாளர்களாக, விஞ்ஞானிகள் (**Budding writers and scientists**) உச்சங்களை எட்டுவதற்கு வழியை உரு வாக்கலாம். கதைகள், கற்பனையாற்றலை வளப் படுத்தி விரிவடையச் (**Enrich and expand their imagina tion**) செய்கின்றன.

மூலிகைத் தோட்டம், வீட்டுத் தோட்டம் என்பன பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், உணவுகளின் விலையேற்றத்தை (**Escalating food prices**) எதிர்கொள்வதற்கும் உதவுகின்றன. மூலிகைத் தோட்டத்தில் பயறு, உழுந்து, சிறுதானியங்கள், பச்சிலை மூலிகைகள், கீரைகள், முதலுதவி மூலிகைகள், பழங்கள், நோய் எதிர்ப்புச்சக்தி மேம்படுத்தும் மூலிகைகள், ஊட்டச்சத்து மிகுந்த மூலிகைகள், ஊட்டச்சத்து மிகுந்த பயிர்கள் போன்றவற்றை வளர்க்கும் போது அவை நோய் எதிர்ப்புச்சக்தி மேம்பாட்டைத்தந்து பெருந்தொற்று நிலையை ஏற்படாமல் தடுக்க உதவும். மூலிகைகளிலிருந்து வரும் நறு மணமானது உள்ளத்திற்கு உற்சாகத் தையும் உளசுகவாழ்வையும் மேம்படுத்தும்.

மூலிகைத் தோட்டமானது உளரீதியான இயற்கையான குணப்படுத்தும் திறனை (**Natural healing ability**) தொற்று நோய்களை எதிர்கொள்வதற்கு உளரீதியான நோய் எதிர்ப்புச்சக்தி முறைகளை மேம்படுத்தும் (**Enhancing psychological immunity**) வழிமுறைகளை சித்தமருத்துவம் ஆதிகாலத்திலேயே சிறப்பாக செயற்படுத்தி உள்ளது.

காணி சுத்தப்படுத்தல், டெங்கு ஒழிப்பு என்று பல்வேறு மூலிகைகள் அழிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. பற்றீரியா, வைரசு, பங்கசுக்களுக்கு எதிராகத் தொழிற்படும் மூலிகைகள் வீடுகளில், பாடசாலைகளில், அலுவல் கங்களில், மருத்துவமனைகளில், நூலகங்களில் வளர்க்கப்பட வேண்டும்.

யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்கள் மூலமாக தனிநபர், குழு சார்ந்த திட்டம் (**Individual and Group Project**) மூலமாக மூலி கைத் தோட்டங்களை அமைப்பது காலத்தின் கட்டாயமாகும். வடக்குமாகாண சுதேச திணைக்களம் தமது ஒவ்வொரு சித்த மருத்துவ நிலையங்களிலும் தமது மூலிகைத்தோட்டத்தை உருவாக்குவதுடன், நோயாளர்களுக்கு மூலிகைத் தாவரங்களைக் கொடுத்து அவர்களது வீடுகளில் மூலிகைகளை வளர்க்க முனைப்புடன் செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்

சர்ச்சைக்குரிய விடயம் – சமகால அரசியல் பார்வை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

கேள்வி: இதில் நல்லாட்சிஅரசாங்கம்,நுந்தகட்டத்தில் நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்தீர்கள் அப்பொழுது கோடி கோடியாக ரணில் விக்ரமசிங்க அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு கம்பரலிய என்னும் திட்டத்தின் மூலம் பணங்களை அள்ளிக்கொடுத்திருந்தார் அதிலே நீங்கள் மட்டும் தான் அந்த 2 கோடி ரூபாயை வாங்கவில்லை. அதனூடாகத்தான் நீங்கள் மாறுபட்ட கருத்துக்களை பாராளுமன்றத்திலே தெரிவிப்பதாகவும் உங்களுக்கு பாராளுமன்றத்தில் பேச வாய்ப்பு கொடுப்பதில்லை என்பதாகவும் நிலைமை ஏற்படுகின்றது அதன் பின்னர் தான் கட்சிகளுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து நீங்கள் வெளியேறினீர்கள். ஏன் கொடுக்கப்பட்ட அந்த கோடிக் கணக்கான பணத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை?

பதில் : நீண்ட காலத்திற்கு பின்னர் பழைய விடயங்களை நீங்கள் திருப்பி கேட்கின்றீர்கள். இது பல தடவைகள் பேசப்பட்ட விடயங்கள் ஆனால் உண்மையில் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலம் ஒரு பொற்காலம் என்று சொல்லாவிட்டாலும் கூட கிடைத்த அந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை. குறைந்தபட்சம் அடிக்கடி சம்பந்தன் ஐயா கூறுவார் ஒரு ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்த ஒரு தேசிய அரசாங்கம் ஒன்று அமைந்திருக்கின்றது. இது எங்களுக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் ஒன்று என்று. ஆனால் நாங்கள் அன்றைய காலகட்டத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துவதற்காக பல முயற்சிகள் செய்தோம் பாராளுமன்ற கூட்டங்கள். தமிழ் தேசிய ஒருங்கிணைப்பு கூட்டங்கள் என இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி குறைந்தபட்சம் மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கிற்கு வரவு - செலவு திட்டத்தில் விசேடமான நிதி ஒதுக்கீடு இருந்து காணாமல் போன விடயம் கைதிகள். நில அபகரிப்புகள் என பல்வேறுபட்ட பிரச்சனைகளை இந்த 4 வருட காலத்திற்குள் தீர்ப்பதற்கான பல சந்தர்ப்பம் எங்களுக்கு இருந்தது.

ஏனென்றால் அன்றிருந்த அரசாங்கம் முழுக்க முழுக்க தமிழ் தேசிய கூட்டமைப்பை முழுமையாக நம்பியிருந்தது. பாராளுமன்றத்தின் வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றுவதாக இருக்கலாம் அல்லது ஐ.நா மனித உரிமைப் பேரவையில் கால நீடிப்பை பெற்றுக்கொள்ளும் விடயங்கள் உட்பட பல விடயங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரில் என்னைத் தவிர ஏனைய அத்தனைபேரும் இந்த அரசாங்கம் நல்லாட்சி காலத்தில் முழுமையாக அதற்கு ஒத்துழைத்தார்கள். வரவு - செலவு திட்டத்திற்கு பாதுகாப்பு நிதிய ஒதுக்கீடாக இருக்கட்டும் அனைத்து விடயங்களுக்கும் முழுமையாக ஒத்துழைத்தார்கள்.

ஜெனீவா தீர்மானங்கள் வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் பாதுகாப்புக்கு பெரும் தொகையான நிதி ஒதுக்கீடுகள் வடக்கில் ஆயிரம் விசாரணைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உட்பட தமிழ் மக்களுக்கு விரோதமான மோசமான சட்டமூலங்களுக்கு வந்து அன்றைய காலகட்டத்தில் அவர்கள் அதை பயன்படுத்தினார்கள் நான் நினைத்திருந்தால் எல்லாவற்றிற்கும் கையை தூக்கிக்கொண்டு பல விடயங்களை செய்திருக்கலாம். ஆனால் அது வரலாற்றில் நாங்கள் அன்று அந்த ஆதரவினை வழங்கியது என்பது மிக துரோகமான செயல் அதற்கு நான் துணை போகவில்லை அதற்காக அவர்கள் கம்பரலியாவை எனக்கு தரமறுத்தார்கள். நானோ என்னுடைய கட்சியோ தமிழ் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளுக்கு துணை போகக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம் அதனால் தான் நான் அதை ஆதரிக்கவில்லை.

கேள்வி : கூட்டாக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதாவது ஆனந்த சங்கரி தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஈபிஆர்எல்எப் மூன்றாவதாகத் தான் நீங்கள் அதில் இருந்து வெளியேறியிருக்கின்றீர்கள். உண்மையில் நீங்கள் அதில் இருந்து வெளியேற என்ன காரணம்?

பதில் : ஆரம்பத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பானது பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாக அதை கொண்டுவர வேண்டும் அதற்கான ஒரு கட்டமைப்பு வேண்டும் ஜனநாயக ரீதியாக வெளிப்படையாக கூட்டாக தீர்மானங்கள் எடுக்க வேண்டும் என்பதில் நீண்ட காலம் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எங்களது கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தது. ஆனால் அவர்கள் பதிவு செய்வது தொடர்பாகவோ கூட்டமைப்பை ஜனநாயக ரீதியான ஒரு கட்டமைப்பாக மாற்றுவதற்கோ எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. இரண்டாவது நல்லாட்சி காலத்தில் எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் வாய்ப்புக்களை தமிழ் மக்களுக்காக அதை பாவிக்கப்பட வேண்டும் என்ற விடயங்களை நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். முக்கியமாக நாங்கள் பாராளுமன்ற குழு கூட்டங்களிலும் சரி ஒருங்கிணைப்பு கூட்டங்களிலும் தொடர்ச்சியாக இந்த கருத்துக்களை முன்வைத்துக்கொண்டிருந்த ஒரு கட்டத்தில் இறுதியாக என்னுடைய பாராளுமன்றத்தில் இருக்கின்ற சிறப்பு உரிமையைக் கூட திரு சம்பந்தன் சுமந்திரன் போன்றோர்கள் அதைக் கூட தடுத்து நிறுத்தினார்கள்.

பாராளுமன்றத்தில் என்னுடைய பேச்சுரிமையை மறுத்தார்கள். எனக்குரிய நேரத்தை கொடுக்கக் கூடாது என சபாநாயகருக்கு எழுத்து மூலத்திலும் நேரடியாகவும் தெரிவித்தார்கள். நான் ஒன்றுக்கு மூன்று தடவைகள் சபாநாயகரிடம் போய் கேட்டிருந்தேன். இது என்னுடைய சிறப்புரிமை. சபாநாயகர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நீங்கள் தான் பொறுப்பான நபர் எனவே எனக்கு வாக்களித்த மக்களுடைய பிரச்சனையை பேசுவதற்கு நீங்கள் நேரம் ஒதுக்கி தரவேண்டும் என கேட்ட இடத்தில் அவர் கூறினார்.

திரு சம்பந்தன் மற்றும் திரு சுமந்திரன் அவர்கள் உங்களுக்குரிய நேரத்தை வழங்க வேண்டாம் என எனக்கு கூறியதனால் தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களுக்கு பேசுவதற்கான நேரம் தரமாட்டேன் என்று கூறினார். எனவே குறைந்தபட்சம் நாங்கள் மிதவாத கட்சி என்று பேசினார்கள் ஜனநாயகத்தை நாங்கள் மதிக்கின்றோம் என்று சொன்னார்கள். எனவே வன்னி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மக்களது பிரதிநிதியாக நான் தெரிவு செய்யப்பட்டிருந்தும் கூட எனக்கான பேச்சுரிமையை மறுத்திருந்தார்கள். அதுமட்டுமல்ல அவர்கள் கொண்டுவந்த பிழையான தீர்மானங்களுக்கு நான் ஆதரவு வழங்கவில்லை என்ற காரணங்களையும் வைத்து அவ்வாறு நகர்ந்தார்கள்.

எனவே நாங்கள் கூட்டமைப்பாக வைத்திருக்க சொல்லி கேட்டிருந்தோம் அதை அவர்கள் செய்யவில்லை. நல்லாட்சி காலத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு சாதகமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தோம் அதை அவர்கள் செய்யவில்லை. இறுதியாக எனது குரல் வலையை நசுக்கும் அளவிற்கான நிலைக்கு போனதன் பின் தொடர்ச்சியாக அதற்குள் இருக்க முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்.

கேள்வி : இவ்வாறு இருக்கும் பொழுது தற்பொழுது நீங்கள் கூட்டமைப்பில் இருந்து வந்த பின் நான் நினைக்கின்றேன் அதற்கு முன் அதாவது பாராளுமன்ற உறுப்பினராக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் நான்கு தடவைகள் நிச்சயிக்கப்பட்ட வெற்றியை நீங்கள் அடைந்தீர்கள். அதன் பின் இந்த வெற்றியை நீங்கள் அடையமுடியாமல் போனதன் காரணம் என்ன?

பதில் : உண்மையில் நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த காலத்தில் தமிழரசுக் கட்சி எவ்வளவு தூரம் தங்களது கட்சிக்காக வீட்டு சின்னத்திற்காக வேலை செய்திருக்கின்றார்களோ இல்லையோ தெரியாது வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் அந்த கட்சியையும் சின்னத்தையும் கூட்டமைப்பையும் தமிழ் மக்களினுடைய மனசில் அல்லது இதயங்களில் பச்சை குத்தியதில் எங்களுக்கு பெரிய பங்கு இருக்கின்றது. ஏனென்றால் நாங்கள் வெறுமனே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தது மட்டுமல்ல மக்களோடு மக்களாக ஜனநாயக ரீதியான பல்வேறுபட்ட போராட்டங்களோடு இந்த மண்ணில் இருந்து தொடர்ச்சியாக வேலை செய்ததன் அடிப்படையில் அந்த சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்றது அந்த கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக உழைத்தவர்கள். ஆனால் நாங்கள் ஒரு கட்டத்தில் மக்களுக்கு எங்கள் மேல் ஒரு விசுவாசம் இருந்தாலும் அந்த சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஒரு நிலப்பாடு இருந்தது. எனவே மக்கள் மத்தியில் அந்த சின்னம் என்னும் ஒரு பதிவு இருந்த படியால் அந்த தேர்தலில் நாங்கள் வரமுடியாத சூழல் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை மாறிவிட்டது.

கேள்வி : DTNA என்ற கூட்டமைப்பை நீங்கள் தற்பொழுது உருவாக்கியிருக்கின்றீர்கள் அதிலே ஐந்து கட்சிகள் இருக்கின்றன. அதில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்களும் இணைந்திருக்கின்றார்கள். ஆனால் ஜனநாயக போராளிகள் அவர்கள் தேர்தலுக்காக வந்து கேட்ட பொழுதுஅப்பொழுதுரெலோ,புளொட்,ஈபிஆர்எல்எப் எல்லோரும் கூட்டணியாக இருந்தார்கள். ஒரு ஆசனம் கூட நீங்கள் அவர்களுக்கு வழங்கவில்லை. ஆனால் தற்பொழுது நீங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வந்தவர்களையும் அதிலே இணைத்து பயணிக்கின்றீர்கள். இதனால் தான் முன்னாள் முதலமைச்சர் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அவர்கள் அதிலிருந்து வெளியேறினார். அதனால் உங்களால் அந்த கூட்டை அமைக்க முடியாமல் போனது என்றவொரு கருத்து நிலவுகின்றது. இன்னுமொரு கருத்து சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை இணைத்துக்கொண்டிருந்தால் நிச்சயம் தமிழரசுக் கட்சி ஒரங்கட்டப்பட்டிருக்கும் என்பது இரண்டாவது கருத்தும் இருக்கின்றது. இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

பதில் : அதைத் தான் நான் ஆரம்பத்தில் கூறினேன். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனநாயக ரீதியாக அதுவொரு நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்தால் தன்னிச்சையான இந்த முடிவுகள் வந்திருக்காது நீங்கள் சொன்னது உண்மை தான் அந்த கூட்டத்தில் நானும் இருந்தேன். ஜனநாயக போராளிகள் வந்து சம்பந்தன் அவர்களிடம் இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும்படி கேட்டிருந்தார்கள். அவர்களை நீங்கள் புலனாய்வுத்துறையுடன் தொடர்பில் இருக்கின்றீர்கள். எனவே உங்களுக்கு அந்த சந்தர்ப்பம் தரமுடியாது என்று கூறினார். ஆனால் மறைமுகமாக தமிழரசுக் கட்சி அவர்களை பாராளுமன்ற தேர்தல் மாகாணசபைத் தேர்தல் என இரகசியமாக அவர்களை வைத்து தாங்களது தேர்தல் காலத்தில் அவர்களை பயன்படுத்தினார்கள். என்றவொரு விடயம் இருந்தது. உண்மையில் நாங்கள் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள் புளொட் போன்ற அனைவருமே தேர்தல் அரசியலுக்காக வரவில்லை. இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக இருந்த அடக்குமுறைக்கு எதிராக ஆயுத போராட்டத்திற்கு உள்ளால் வந்தவர்கள். ஆனால் அவர்களையும் அன்றைய காலகட்டத்தில் கூட்டமைப்புடன் இணைத்திருக்க வேண்டும். ஆனால் சம்பந்தன் தமிழரசுக் கட்சியில் பெரும் தவறை விட்டிருந்தது. எனவே அந்த தவறை நிவர்த்தி செய்து கொள்ளும் முகமாக இன்று ஆயுத போராட்டத்திற்குள்ளாலே அவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் ஜனநாயக ரீதியில் இந்த மக்களுக்கு வேலை செய்ய விரும்பினார்கள். இன்னும் விசேடமாக தமிழீழ விடுதலைப்புலிகள் சார்ந்த பல ஆயிரக்கணக்கான மாவீரர் குடும்பங்கள் இருக்கின்றார்கள். போராளிகள் குடும்பங்கள் இருக்கின்றார்கள். விசேட தேவைகளுக்கு உட்பட்டவர்கள் இருக்கின்றார்கள். என்ன தான் ஏனையவர்கள் கட்சிகள் அமைப்புகள் இருந்தாலும் கூட எதிர் காலத்தில் தீவிரமான ஒரு ஆயுத போராட்டத்திற்குள் இருந்த ஒரு அமைப்பு ஜனநாயக ரீதியில் வருவதற்கு மூத்த அரசியல்வாதிகள் என்று சொல்லுபவர்கள் அல்லது நாங்களும் மிதவாதிகள் என்று சொல்பவர்கள் அல்லது ஆயுத போராட்டத்திற்கு மூல காரணமாக இருந்தவர்கள் இன்று அந்த இளைஞர்களுக்கு வழிவிட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை. இன்றிருக்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பானது எதிர்காலத்தில்தீவிரமான ஒரு ஆயுத போராட்டத்தில் இருந்து இன்று ஜனநாயக வழிக்கு வருவதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் எந்தவிதமான தவறும் இல்லை. அடுத்தது திரு. விக்னேஸ்வரன் அவர்கள் இந்த கூட்டமைப்பில் இருந்து ஏன் வெளியேறி சென்றார் என்பது அனைவருக்குமே தெரியும். அதே போன்று அவர் எப்படி இந்த அரசியலுக்குள் வந்தார் என்பதும் தெரியும். மாகாண சபைத் தேர்தலுக்குள் திரு. சம்பந்தன். சுமந்திரன் போன்றோர்கள் தான் அவரை இதற்குள் கொண்டு வந்தார்கள். இரண்டாவது பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் ஈபிஆர்எல்எப். மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எங்களது கட்சியின் பெயரையும் சின்னத்தையும் மாற்றி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி என்ற ஒன்றை உருவாக்கி அந்த மீன் சின்னத்திற்கு கீழ் தான் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார்கள். எனவே எந்த கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வந்தாரோ அந்த கட்சியையும் அந்த சின்னத்தையும் உதரித்தள்ளிவிட்டு அவர் வெற்றி பெற்றுவிட்டார். அந்த காலத்தில் அவரது கட்சி தமிழ் மக்கள் கூட்டணி பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவருக்கு ஒரு மான் சின்னம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே நாங்கள் 40 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கட்சி எங்களுக்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. ஏன் அந்த கட்சியையும் சின்னத்தையும் தியாகம் செய்தோம் என்று சொன்னால் பலமான ஐக்கிய முன்னணி வரவேண்டும் என்று தான் செய்தோம். ஆனால் அவர் தற்சமயம் தன்னுடைய மான் சின்னத்திற்கு கீழ் தான் நான் போட்டியிட வேண்டும் ஏனையவர்களும் அதற்கு பின்னால் தான் வரவேண்டும் கட்சிக்குள் முக்கியமான பொறுப்புகள் வேண்டும் என்ற காரணங்களை முன்வைப்பதால் தான் இதை வைத்து அவர் வெளியேறினார்.

கேள்வி : தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கின்றார் அவர் மீண்டும் வருவார் ஒரு போரை ஆரம்பிப்பார் அல்லது ஜனநாயக வழியிலான போராட்டங்கள் இடம்பெறும் என்ற கருத்தை இந்தியா தனது சுயநலத்திற்காக சொல்லியிருக்கின்றது என பரவலாக கூறப்படுகின்றது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?

பதில் : சர்ச்சைக்குரிய கேள்வியை கேட்டிருக்கின்றீர்கள் உண்மையில் இது நேரடியாக அந்த போர்க்களத்தில் நான் கேட்டிருக்கவில்லை. அதில் சம்பந்தப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளும் தான் அவர்கள் தான் இறுதிக்கட்ட யுத்தம் வரையில் ,ந்த போர்களத்தில் இருந்தவர்கள். எனவே அவர் உயிருடன் இருக்கின்றார். இல்லை என்ற பெரிய ஒரு சர்ச்சையானது நான் தெரியாத ஒரு விடயத்தை இதில் கூற முடியாது.

ஏனென்றால் அந்த களத்தில் நாங்கள் நிற்கவில்லை. ஊடகங்களில் வந்த செய்திகள் காட்டப்பட்ட புகைப்படங்கள் காணொளிகள் அந்த களத்தில் நின்ற போராளிகள் ஒரு பக்கம் நிற்கின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள் இன்னுமொரு பக்கம் இல்லை என்று சொல்லுகின்றார்கள் நெடுமாறம் ஐயா இப்படியான ஒரு கருத்தை கூறியிருக்கின்றார். இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அந்த போர்க்களத்தில் இறுதி வரையில் இருந்தவர்களுக்கும் தான் உண்மையான நிலவரம் தெரியும்.

நேர்காணல் : இரணியன்

வெடுக்குநாரிமலை விடாது துரத்தும் இனவாதம்

வெடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும் வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக் கிராமங்களில் ஒன்று தான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம்.

எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும். ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும் அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனமும் இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

காட்டின் மணத்தை நுகர்ந்துகொண்டும். காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியை காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒரு வகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது.

இந்தப்பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவ் எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துக்களின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு விநாயகர். அம்மன். வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள்.

உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில் நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற. எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பாரிய கல் ஒன்று சிறு சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழிநுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியை கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்லுகின்ற போது ஒரேசீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும் நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியை கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப்போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற் சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும் தாங்கள் பிரசாதமாக படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும் பக்தர்களும்.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச்செல்ல மலையின் உச்சிப்பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடை படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழுங்காத நிலையில் அச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கினையும் தொடர்ந்திருக்கிறது திணைக்களம்.

மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து அப்பகுதியின் இரம்மியமான வனப்பையும் சூழலையும் அனுபவிக்க முடிகிறது. பின்னர் அங்கிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விவிதமான படிகளோ. அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றியிலான தாங்கிகளையும். பெருங் கொடிகளையும். மரங்களையும் பற்றிக்கொண்டு மேலே ஏற முடிகின்றது. பெரும்

பிராயத்தனத்தின் பின் மேல் நோக்கி ஏறிச்செல்ல மலையின் உச்சியில் கற் பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார். கூம்பு வடிவிலான பாறைய சதுரக் கற்களின் மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கைய வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள். இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல் நோக்கி ஏறிச்செல்ல அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முன்நூறு அடிகளுக்கு மேற்பட்ட மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகை கண்டு கொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும். மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும். இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

புவியின் பௌதீகவியல் ரீதியில் இப்படியான மலை உருவாக்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. புவியின் உட்பகுதியில் இயங்குகின்ற மேற்காவுகளை ஓட்டங்களின் காரணமாகவும். புவித்தகடுகளின் ஒருங்குதல் செயற்பாட்டின் காரணமாகவும் மலை உருவாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் பௌதீக இட அமைவும். இவ் வெடுக்குநாறி மலையின் புவியியற் காரணிகளும் கற்றுணரப்பட வேண்டிய அதே நேரத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பரந்து விரிந்திருக்கின்ற அந்தக் காடுகளும் காட்டு மரங்களும். இந்த மலையும் தேக்கி வைத்திருக்கின்ற தொன்மத்தின் கதைகள் பலவாகும்.

இலங்கையின் குடித்தொகை வரலாற்றில் வன்னிப்பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கின்றது. இங்கு குளங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய குடியேற்றத்திட்டங்கள் பெருங்கற்காலத்தின் எச்சங்களையும் அதற்கு முந்திய குறுணிக்கற்கால எச்சங்களையும் பறைசாற்றுபவை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். குளங்களை அச்சொட்டாகக் கொண்ட கிராமங்களும் இன்னும் பூனகரி. மன்னாரின் கட்டுக்கரை மற்றும் தேக்கம் பகுதிகள். வவுனியாவின் செட்டிகுளம். மாமடுவ போன்ற பல பிரதேசங்கள் இவற்றின் எச்சங்களாக எஞ்சி நிற்கின்றன. இங்கு கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் இதனை உறுதி செய்கின்றன. இலங்கையில் விஜயன் வருகைக்கு முன்னர் இங்கு ஜக்ச. நாக என்கின்ற இரண்டு இனக்குழுக்கள் வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையே பண்பாட்டு ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டதாகவும் உடலியல் அடிப்படையில் ஒத்த இயல்புகளைக்கொண்டிருந்ததாகவும் வரலாறு சொல்கிறது. அந்த வகையில் புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தை ஆரம்பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள் தான் என்பது "சிரான் தெரணியகல" உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கிலங்கையின் படுவான்கரையின் வெல்லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனாங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதே போன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்கு நாறி மலையிலும் பதியப்பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரி வடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன்படுத்தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும். நாக வழிபாடும். நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீரகமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

ஆனால் தொல்லியல் திணைக்களத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடாத்துவதற்கும் இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்க்கொள்வதும் இந்த நிலம் கொண்டிருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும். இங்கு கோயிலிற்கு சென்று வருவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடை வித்துள்ளது. அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக்குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோமீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னைய நாள் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வனவள பாதுகாப்புத் திணைக்களம் அதற்கான அனுமதியை தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற்கான விளக்கக் கடிதங்கள் முழுமையான சிங்கள மொழியில் ஆலய நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் இந்த நாட்டின் அரச கரும மொழிகள் என்கின்ற நிலையில் மக்களுக்காக. மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலேயே அரச திணைக்களங்கள் சேவையாற்ற வேண்டும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை நடாத்தக்கூடாது என்று தொல்லியல் திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடிதத்தை அனுப்பி பொலிசார் தடுத்து. பின்னர் நீதி மன்ற அனுமதியில் பொங்கல் நிகழ்வுகள் அன்று ஆரம்பித்து பத்தாவதுநாள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள் ஆலய நிர்வாகத்தினர்.

தொல்லியல் சின்னங்கள் முறையாகப்பராமரிக்கப் பட வேண்டிய அதே நேரத்திலே. வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. ஆனால் இலங்கையின் புராதன சின்னாங்களில் ஒன்றாகிய சிகிரிய சிங்க மலையில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வரமுடியும் எனில் வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனாங்களில் ஒன்றாகிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வதற்காக. காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதி வரை கற்பாதைகள் அமைத்து சென்று வர முடியும் எனில் அதே போன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடாந்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற் பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங்குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்திற்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்ற போது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள் தான் என்ன??

துரியோதரன்

உலக வலம்

இஸ்ரேலை நோக்கிய ரொக்கெட் லோஞ்சரை லெபனான் இராணுவம் செயலிழக்கச் செய்தது

இஸ்ரேலை நோக்கி ஏவப்படுவதற்கு தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த ரொக்கெட் லோஞ்சர் ஒன்றை தான் செயலிழக்கச் செய்ததாக லெபனான் இராணுவம் (07) அன்று தெரிவித்துள்ளது. லெபனான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்திய சில மணித்தியாலங்களின் பின்னர் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லெபனானிலிருந்து அன்று (06) இஸ்ரேலை நோக்கி அன்று (06) ரொக்கெட்டுகள் ஏவப்பட்டதையடுத்து, அன்று (07) காலை லெபனான் மற்றும் பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தின் மீது இஸ்ரேல் அன்று(07) காலை ஷெல் தாக்குதல்களை நடத்தியது.

ஹமாஸ் இயக்கத்தை இலக்குவைத்து இந்த பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. அன்று(06) லெபனானிலிருந்து 34 ரொக்கெட்கள் இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரொக்கெட்டுகள் பொருத்தப்பட்டு, இஸ்ரேலை நோக்கி ஏவப்படுவதற்காக தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த பல்குழல் ரொக்கெட் லோஞ்சர் ஒன்றை தான் செயலிழக்கச் செய்ததாக லெபனான் இராணுவம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலிய எல்லைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் மேற்படி ரொக்கெட் லோஞ்சர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் லெபானன் இராணுவம் தெரிவித்துள்ளது.

உயிரை பறிக்கும் 'மார்பர்க்' வைரஸ் ஆப்ரிக்காவில் வேகமாக பரவுகிறது

கடுமையான காய்ச்சல், தலைவலி, இரத்தக் கசிவு ஏற்படுத்தி உயிரைக் கொல்லும் தீவிரம் உடைய, 'மார்பர்க் வைரஸ்' ஆப்ரிக்காவில் வேகமாக பரவி வருகிறது. மேற்கு ஆப்ரிக்க நாடான கினியில், மார்பர்க் வைரஸ் பரவல் இருப்பது கடந்த பெப்ரவரி மாதம் கண்டறியப்பட்டது. இதுவரை ஒன்பது பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு இருப்பதை உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்துள்ளது. மேலும், 20 பேருக்கு அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆப்ரிக்காவில் உள்ள பழந்தின்னி வௌவால்களிடம் இருந்து இந்த வைரஸ் பரவுகிறது. இந்த வைரஸ் வௌவால்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. எபோலா வைரசை போல மிக தீவிரமான பாதிப்புகளை மார்பர்க் ஏற்படுத்துகிறது.

கடுமையான காய்ச்சல், தலைவலி, உள் உறுப்புகள் மற்றும் உடலில் வெளிப்புறங்களில் ரத்தக் கசிவு போன்றவை மார்பர்க் வைரசின் அறிகுறிகள் என, மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வைரஸ் 88 சதவீதம் உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது.

வைரசால் பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடி தொடர்பில் இருப்பவர்களுக்கு இந்த வைரஸ் பரவுகிறது. உடலில் உள்ள வெட்டுக் காயம், வியர்வை உள்ளிட்டவை வாயிலாக தொற்று பரவுகிறது. தற்போது மேற்கு ஆப்ரிக்க நாடுகளான கினி மற்றும் தான்சானியாவில் வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது. ஆப்ரிக்க நாடுகளுக்கு செல்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படி, அமெரிக்காவின் சி.டி.சி., எனப்படும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் எச்சரித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி தயாரிப்பில் இந்தியா முன்னேற்றம்

புதிய தொழில்துறை தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த நிதியாண்டில் இந்திய கையடக்க தொலைப்பேசி ஏற்றுமதி 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது. "மேக் இன் இந்தியா" அப்பில் கையடக்க தொலைப்பேசி (ஸ்மார்ட்போன்கள்) திட்டம் இப்போது மொத்த ஏற்றுமதியில் 50 சதவீதத்தை கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து 40 சதவீத கையடக்க தொலைப்பேசி ஏற்றுமதியுடன் சாம்சுங் மற்றும் மீதமுள்ள 10 சதவீத ஏற்றுமதி ஏனைய ரகங்களை கொண்டுள்ளன.

இந்தியா தனது தொழில்நுட்ப உற்பத்தித் துறையில் வலுவாக முன்னேறி உலக அளவில் முத்திரை பதித்து வருகிறது. நவீன கையடக்க தொலைப்பேசி உற்பத்தியில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கத்தின் முன்னுரிமைப் பட்டியலில் தொலைத்தொடர்புத் துறை உள்ளது. புதிய தொழில்துறை தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டு முடிவடைந்த நிதியாண்டில் இந்திய நவீன கையடக்க தொலைப்பேசி ஏற்றுமதி 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ. 82,000 கோடிக்கு மேல்) தாண்டியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்தியா செல்லுலார் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் அசோசியேஷன் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, ஆப்பிளின் "மேக் இன் இந்தியா" ஸ்மார்ட்போன்கள் இப்போது மொத்த ஏற்றுமதியில் 50 சதவீதத்தை கொண்டுள்ளன. அதைத் தொடர்ந்து சாம்சுங் மொபைல் ஏற்றுமதியில் 40 சதவீதமும் ஏனைய ரக கையடக்க தொலைப்பேசிகள் மீதமுள்ள 10 சதவீத ஏற்றுமதியில் செல்வாக்கு செலுத்துகின்றன.

மின்சார ஸ்கூட்டர்களுக்கு பிரான்ஸ் தடை

உலக நாடுகள் தற்போது பெற்றோல் , டீசல் வாகனங்களுக்கு பதிலாக மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களுக்கு மாறி வரும் நிலையில், சுற்றுலாவுக்கு பெயர்போன பிரான்ஸ் தலைநகர் பாரீசில் மின்சார ஸ்கூட்டர்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

அங்கு பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக வீதியில் ஆங்காங்கே மின்சார வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருக்கும். தேவைப்படுபவர்கள் அதனை ஸ்கேன் செய்து பயன்படுத்தி கொள்ளலாம். ஆனால் 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாராக இருந்தாலும் இதனை பயன்படுத்த முடியும் என்பதால் அங்கு விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்தது. எனவே இந்த மின்சார வாகனங்களை தடைசெய்ய வேண்டும் என பலர் குரல் எழுப்பி வந்தனர்.

இதனையடுத்து பாரீஸ் நகர மேயர் அனீ ஹிடால்கோ வாக்கெடுப்பு நடத்தினார். இதில் சுமார் 1 லட்சம் பேர் கலந்து கொண்டதில் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தடை செய்ய வேண்டும் என வாக்களித்தனர்.

இதனால் அந்த நகரில் பொதுமக்கள் பயன்படுத்தும் மின்சார வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனால் தனிநபர்கள் தங்களது மின்சார வாகனத்தை பயன்படுத்த எந்த தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திபெத், தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்

தெற்கு திபெத் நாட்டில் உள்ள ஜிஜாங் பகுதியில் நள்ளிரவு திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந் நிலநடுக்கமானது 4.6 ரிக்டர் புள்ளிகளாக பதிவாகி உள்ளதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்து உள்ளது. இந் நிலநடுக்கத்தால் பயந்து போன பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதமோ பொருட்சேதமோ எதுவும் ஏற்படவில்லை.



இதே போல தஜிகிஸ்தான் நாட்டிலும் அன்று(06) அதிகாலை 3.18 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கடியில் 150 கிலோ மீட்டர் ஆழத்தில் இது உருவானது. இது 4.1 ரிக்டர் புள்ளிகளாக பதிவாகி இருந்தது. இதனால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

விளையாட்டு

81 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தி கொல்கத்தா அபார வெற்றி

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும்.ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை 81 ஓட்டங்களால் வீழ்த்திய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அபார வெற்றியைப் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி. கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் ஆரம்ப ஆட்டக்காரரான ரஹமதுல்லா குர்பாஸ் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வெங்கடேஷ் ஐயர். மந்தீப் சிங். நிதிஷ் ராணா. ஆண்ட்ரூ ரசல் ஆகியோர் விரைவில் ஆட்டமிழந்தனர். இதனால் கொல்கத்தா அணி 5 விக்கெட்டுக்கு 89 ஓட்டங்களை எடுத்து திணறியது. அடுத்து இறங்கிய ரிங்கு சிங். ஷர்துல் தாக்குர் ஜோடி பெங்களூர் அணியின் பந்து வீச்சை சிக்சர். பவுண்டரிகளாக விளாசினர். குறிப்பாக. ஷர்துல் தாக்குர் 20 பந்தில் அரை சதமடித்து அசத்தினார். அவருக்கு ரிங்கு சிங் நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார்.

இந்த ஜோடி 6வது விக்கெட்டுக்கு 103 ஓட்டங்களை குவித்தது. ரிங்கு சிங் 32 பந்தில் 3 சிக்சர். 2 பவுண்டரி உள்பட 46 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். அதிரடியில் மிரட்டிய ஷர்துல் தாக்குர் 29 பந்தில் 3 சிக்சர். 9 பவுண்டரி உள்பட 68 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில். கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 204 ஓட்டங்களை எடுத்தது. இதையடுத்து. 205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் களமிறங்கியது.

இந்நிலையில் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றுள்ளது. 205 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி. 17.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளை இழந்து 123 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது.

தனுஷ்கவுக்கு சமூக ஊடகங்களை பயன்படுத்த அனுமதி

பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவின் பிணையில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு. மீண்டும் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பயன்படுத்த சிட்னி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. 31 வயதான தனுஷ்க குணதிலக்க. இன்று சிட்னியின் டவுனிங் சென்டர் உள்ளூர் நீதிமன்றத்தில் தனது பிணை நிபந்தனை மாற்றத்துக்காக விண்ணப்பித்தார். அவர் சம்மதம் இல்லாமல் உடலுறவு கொண்டமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார். தனுஷ்க குணதிலக்க. கடந்த 2022 நவம்பரில் பிணை பெற்றபோது டிண்டர் மற்றும் பிற சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதற்கு முதலில் தடை விதிக்கப்பட்டது. பின்னர் பெப்ரவரியில் அவரது பிணை நிபந்தனைகள் மாற்றப்பட்டன. அதனூடாக அவருக்கு வட்ஸ் அப் பயன்படுத்துவதற்கும். இரவில் வெளியே செல்லவும் நீதிமன்றம் அனுமதித்தது.

இந்த நிலையில். தற்போது பிணையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்தின் மூலம் குணதிலக்க தனது பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்குகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணை அவர் சமூக ஊடகங்களில் தொடர்புகொள்வதை தடுக்கும் வகையில். அவரது கணக்குகளை முடக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் முன்னதாக உத்தரவிட்டது.

குணதிலக்கவின் வழக்கு மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில். அரசுத் தரப்புக்கு தகவல்களைத் திரட்ட மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இருபதுக்கு 20 உலகக் கிண்ண தொடருக்காக இலங்கை அணியுடன் தனுஷ்க அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்தார். எனினும். முதல் போட்டியில் மட்டுமே விளையாடிய அவர் உபாதை காரணமாக போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்தநிலையில். டிண்டர் என்ற சமூகவலைத்தளம் ஊடாக அறிமுகமான பெண்ணொருவரை சந்தித்து. சிட்னியின் கிழக்குப் புறநகரில் உள்ள தனது வீட்டிற்குத் திரும்பிய கிரிக்கெட் வீரர் தனுஷ்க. தன்னை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார் என்று மனுதாரர் குற்றம்சாட்டியுள்ளார். அதற்கமைய. கடந்த 2022 ஒக்டோபர் 6 ஆம் திகதி அதிகாலையில் சிட்னியின் ஹையாட் ரீஜென்சி விடுதியில் தனுஷ்க கைது செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 09.04.2023 அன்று வெளியிடப்பட்டது.